உ

ஸ்ரீராமஜயம்.

தில்லைவளாகம்

# ஸ்ரீ. வீரகோதண்டராமஸ்வாமி

# உலா.

இது
கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல்
முதல் தமிழ்ப்பண்டிதராகிய
பின்னத்தூர்

## அ. நாராயணசாமி ஐயர்

இயற்றியது.

கும்பகோணம்

## ஜி. வெ. பத்துருசாமி செட்டியார்

அவர்களது
"லார்ட் ரிப்பன் யந்திரசாலையில்"
பதிப்பிக்கப்பட்டது.

1902.

[ *Copy Right Registered.* ]

விலை அணா-4.

உ

ஸ்ரீராமஜயம்.

# * இராமஜாதகம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ... ௧௭௮௫.
கல்யப்தம் ... ... ... ... ... ... ... ... ௪௯௬௧.
இங்கிலீஷ் ... ... ... ... ... ... ... ... 1862.

இவற்றின்மேற் செல்லாநின்ற துந்துபி-ஞு கார்த்திகைமீ ௧௨௳க்கு இங்கிலீஷ்-ஞு 1862-ஞு நவம்பர்மீ 26௳ புதன்கிழமை பூர்வபக்ஷ பஞ்சமி-௧௭ஐ, உத்திராடம்-௮ஐ, பாலவம் ௧௭ஐ, திவி-௧௮வ, அகஸ் ௨௮, உதயாதி ( ௫ )-நாழிகை அளவில் தனுர்லெக்கினத்தில் எழுந்தருளியது: உத்திராடம் பரமநாழிகை ௫௯வ, தற்காலக் கிரகநிலைகளாவன:—

அநுஷம், ௯-ல் ... ... சூரியன்.
உத்திராடம், ௪-ல் ...சந்திரன்.
உத்திரட்டாதி, ௪-ல்... குஜன்.
விசாகம். ௨-ல் ... ... புதன்.
சித்திரை, ௨ல் ... ... குரு.
அநுஷம், ௯-ல் ... சுக்கிரன்.
அஸ்தம், ௧-ல் ... ... சனி.
கேட்டை, ௯-ல்... ...இராகு.
மிருகசீர்ஷம், ௧-ல் ... ... ...கேது.

---

* இராமஜாதகமென்பது ஸ்ரீராமமூர்த்தி பூமியிலிருந்து எழுந்தருளியகாலத்தை ஒருஜாதகமாகக் கணிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| குஜ | | கேது | |
| | இராசிச்சக்கரம். | | |
| சந்திரன் | | | |
| இலக் | சுக்கிரன் இராகு சூரியன் | புதன் | குரு சனி |

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | சனி | புதன் | இலக் |
| இராகு | அம்சசக்கரம். | | |
| | | | கேது |
| | குஜ | சூரியன் சுக்கிரன் | குரு |

சுபமஸ்து.

☞ ஜ்யோதிஷம் வல்லோர் இதனைச் செவ்விதின் விரிவாகக் கணிதம் செய்து பயன்கண்டுகொள்வார்களாக.

# உலாவிலடங்கிய விஷயங்கள்.


| | |
|---|---|
| ஸ்ரீராமர் சிறப்பு ... ... ... | ௧-முதல் ௧௧-வரையில். |
| மற்ற அவதாரங்கள் ... ... ... | ௧௨, ௧௭. |
| சூரியகுலத்தரசர்கள் ... ... ... | ௧௮, ௩௧. |
| அடிமடக்கு ... ... ... ... | ௩௨, ௪௩. |
| ஸ்ரீராமமூர்த்தி முதலாயினோர் முன்பு எழுந்தருளியிருந்த நிலைமை. | ௪௯, ௫௦. |
| அம்மூர்த்திகள் காட்சிகொடுக்கப்பெற்றவர் குலச்சிறப்பு. ... | ௫௧. |
| அவர் பெயர் ... ... ... ... ... ... | ௫௨. |
| அம்மூர்த்திகளை மேலே எழுந்தருளச்செய்ததற்குக் காரணம். | ௫௩. |
| அம்மூர்த்திகள் எழுந்தருளியகாலம். ... ... ... ... | ௫௪, ௫௬. |
| அக்காலத்துள்ள கிரகநிலை. ... ... ... ... ... | ௫௭, ௬௦. |
| அம்மூர்த்திகள் இன்னாரின்னாரென்பது. ... ... ... | ௬௩, ௬௪. |
| அம்மூர்த்திகள் முதலில் பர்னசாலையில் எழுந்தருளியிருந்தது. ... ... | ௬௫, ௬௬. |
| பின்பு கோயில்கொண்டருளியது. ... ... ... ... | ௬௭, ௬௮. |
| இராமபிரான் சிறப்பில், வீட்டுக் கருவிப்பெயர்களும், இடப்பெயர்களும், விலங்கின்பெயர்களும், பறவைப்பெயர்களும், நீர்வாழ்வனவற்றின் பெயர்களும் ஒலித்தல். | ௭௩, ௯௩. |
| துவசாரோகணத் திருநாள் முதலியன. ... ... ... | ௯௪, ௯௬. |
| வஸந்தமண்டபத்திற் கெழுந்தருளுதல். ... ... ... | ௯௯, ௧௦௦. |
| திருமஞ்சனங்கொண்டருளுதல். ... ... ... ... | ௧௦௨, ௧௦௬. |
| கோலங்கொண்டருளுதல். ... ... ... ... ... | ௧௦௭, ௧௨௧. |
| ஷோடசவுபசாரம்.... ... ... ... ... ... | ௧௨௨, ௧௨௯. |

## உலாவிலடங்கிய விஷயங்கள்.


உபயவேதபாராயணம். ... ... ... ... ... ... ...௧௩0, ௧௯௨.

உடன் வந்தோர்வகை... ... ... ... ... ... ...௧௩௩, ௧௬௪.

அபிநயச்சிறப்பு. ... ... ... ... ... ... ...௧௭௨, ௧௮௮.

எழுச்சி. ... ... ... ... ... ... ... ...௧௯௭, ௨0௨.

இரதாரோகணம். ...... ... ... ... ... ... ...௨0௩, ௨0௪.

குழாங்கள். ... ... ... ... ... ... ... ...௨0௪, ௨௫௪.


### பேதை.


இவளுடையதன்மை. ... ... ... ... ௨௫௫, ௨௯௨.

இராமபிரான் சிறப்பில் சில மரப்பெயர்கள் முதலியன ஒலிப்பது. ... ௨௯௩, ௩0௩.

இவள் விருப்பம். ... ... ... ... ... ௩0௬, ௩௨௧.


### பெதும்பை.


இவளுடையதன்மை. ... ... ... ... ௩௨௨, ௩௩௫.

,, கழங்காடுதல். ... ... ... ௩௩௬, ௩௪௮.

தசாங்கம். ... ... ... ... ... ௩௪௯, ௩௬௩.

இராமபிரான் சிறப்பில் உவ—நக்ஷத்திரப் பெயர்களும் ஒலிப்பது. ... ௩௬௪, ௩௮௨.

இவள் விருப்பம். ... ... ... ... ௩௮௩, ௩௯௪.


### மங்கை.


இவளுடையதன்மை. ... ... ... ... ௩௯௫, ௪0௫.

,, பந்தடித்தல். ... ... ... ... ௪0௬, ௪௩௮.

இராமபிரான் சிறப்பில் உழவுத்தொழிற்குரிய கருவிமுதலியவற்றின் பெயர்கள் ஒலிப்பது. ... ௪௩௯, ௪௪௮.

இவள் காமுறல். ... ... ... ... ௪௪௯, ௪௬0.

பாங்கிதேற்றல். ... ... ... ... ௪௬௧, ௪௭௩.

### மடந்தை.


இவளுடையதன்மை. ... ... ... ... ௪௭௫, ௫௦௧.

இராமபிரான் சிறப்பில் வீட்டிலுள்ள சிலபாத்திரங்களின் பெயர்கள் ஒலிப்பது. ... ௫௦௯, ௫௧௮.

இவன் காமுறல். ... ... ... ... ௫௧௯, ௫௪௨.


### அரிவை.


இவள் கடவுளின் வடிவம்பெற்றவளாகத் தோழிகூறல். ... ... ௫௫௪, ௫௭௦.

இராமபிரான் சிறப்பில் மனிதசாதிப் பெயர்கள் பல ஒலிப்பது. ... ... ௫௭௧, ௫௭௯.

இவள் காமுறல். ... ... ... ... ௫௮௨, ௫௯௫.

,, மன்மதனைச்சபித்தல். ... ... ... ௫௯௭, ௬௦௬.


### தெரிவை.


இவளுடையதன்மை. ... ... ... ... ௬௧௧, ௬௨௦.

,, கனவுநலிபுரைத்தல். ... ... ... ௬௨௧, ௬௪௫.

,, மடலேறும் வகையுரைத்தல். ... ... ௬௪௬, ௬௫௨.

இராமபிரான் சிறப்பில் சிலநூற்பெயர்களும் உரையாசிரியர் பெயர்களும் ஒலிப்பது. ... ... ௬௫௪, ௬௬௩.

இவள் காமுறல். ... ... ... ... ... ௬௬௪, ௬௮௩.


### பேரிளம்பெண்.


இவளுடையதன்மை. ... ... ... ... ௬௮௭, ௭௧௪.

மறையோரிருவர் வரவு. ... ... ... ... ௭௧௫, ௭௨௦.

இவர்கூற்று. ... ... ... ... ... ௭௨௧, ௭௪௫.

இராமபிரான் சிறப்பில் அறுபதுவருஷப் பெயர்களும் ஒலிப்பது. ... ... ௭௪௬, ௭௭௧.

இவள் காமுறல். ... ... ... ... ௭௭௩, ௭௯௫.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | கண்ணிகளின் எண். | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪ | ௧௨ | சோமகன் | சோமுகன். |
| * ௧௧ | ௮௧ | சபரி | சவரி. |
| * ௬௫ | ௬௧0 | யர்நின் றூற் | யர்க ளாற். |
| * ௭௪ | ௭0௨ | கடகமென் | கவினென். |
| * ௮0 | ௭௫௬ | யாஞ்சொ | யஞ்சொ. |

* இக்குறியிடப்பட்டன சில பிரதிகளில் மட்டுமே காணப்படுவன.

உ

ஸ்ரீராமஜயம்.

# தில்லைவளாகம்

# ஸ்ரீவீரகோதண்டராமஸ்வாமி

# உலா.

காப்பு.

**விநாயகர்.**

பூமல்கு தென்றில்லைப் புண்ணியன்சீ ராமனுலாப்
பாமல்க வோர்துணையாப் பற்றுவா—மாமல்கு
மைந்துசெறி சேயோன்மான் மங்கைதனை மீட்டணைய
வந்துதவி னோன்றாண் மலர்.

**ஆஞ்சநேயர்.**

ஐந்திரஞ்சேர் மாகடலு மாரியன்றா தாய்க்கடலும்
வந்திலங்கை யொன்றார் மலிகடலு—மூந்தெவரும்
வீட்டாப் பவக்கடலு மெல்லக் கடந்தநம்பி
தாட்டா மரைநமக்கோர் சார்பு.

### நம்மாழ்வார்.

வேதந் தமிழில் விளங்கச் செழுங்குருகூர்ப்
போதந் தமிழ்திற் புகன்றருள்செய்—நாத
னொருமாறன் பாதங்க ளுள்ளுதுஞ்சொன் மாலை
வருமாறன் பாக மகிழ்ந்து.

### ஆசிரியர்.

சுருதி யொருங்குப்பண்டே தோற்றுவித்தீண் டின்பந்
தருதமிழன் பாலெனக்குந் தந்த—திருமறையோன்
மாமுத்து ராமனெனும் வள்ளல்பதம் போற்றியிந்நூல்
காமுற் றுரைப்பன் களித்து.

### அவையடக்கம்.

தருக்கொ ணறும்பூங் குவாலிறும்பு தம்மு
னெருக்க முகிழ்த்தென் றிகழா—திருத்தில்லை
நம்பியுலா வென்பனுவ னொடி நறுந்தமிழோர்
வெம்பியுரை யாடார் வெகுண்டு.

V. B. SUBRAHMANIYASA TAMIL PANDIT

## நூல்.

பூமேவு நான்முகற்கும் பொன்மேவு நாட்டுக்குக்
காமேவு கற்பகம்வாழ் காவலற்கு—மாமேவு (க)

மும்பருக்கும் விண்மே லுறையும் பிறருக்கு
மம்புவியில் யாவருக்கு மாதியா—யம்புவியி (உ)

லெவ்வினைக்குங் காவலா யெவ்வினையுஞ் செய்வித்திட்
டவ்வினைக ளெல்லாந்தா னாகியே—யெவ்வுயிர்க்குங் (௩)

காவலா யெங்குங் கரும்பி ரதமெனப்
பாவகனிற் சூடென் பதுவென்ன—மேவியகா (௪)

ரெள்ளினெய் யென்ன விலங்குபொன்னிற் சோதியென்ன
வுள்ளுளே தோன்றி யொளிருவோ—னுள்ளவர்கட் (௫)

சாதியாய் நின்றதன்றி யப்பாலு மெப்பாலுஞ்
சோதியாய் நின்ற சுடர்க்கொழுந்து—சோதியாப் (௬)

பூதமோ ரைந்தின் புணர்ப்பாய்க் கலந்தோன்பல்
வேதமே தானாய் விளங்குவோன் —போதமெய் (௭)

நச்சுத ரும நவின்றார்க் கருள்புரியு
மச்சுத நாமங்கை யாழியா—னச்சரவப் (அ)

பாயலான் பாயும் பறவைக் கிறையூர்ந்தோன்
சாயலான் மேகந் தனையென்றோன்—றூயதுழாய் (௯)

மாலையா னெல்லோர்க்கு மாலளிப்போன் பள்ளிநெடு
வேலையா னஞ்சாா் மிடற்றோனு—நூலின் (௧0)

மருங்கமைத்த நாவின் மலரோனுந் தானுய்த்
திருந்து தொழிலொருங்கு செய்வோன்—பொருந்து (௧௧)

மறையனைத்துந் தான்வாரி வாரி யொளித்த
கறைமனத்துச் சோமகனைக் காய்வா—னறைகடலின் (௧௨)

மீனமாய்ச் சென்றந்த வெய்யோனைக் கொன்றனந்த
மானமா வேதமருள் வண்மையா—னூனமற (௧௩)

வானோர் கடல்கடைநாள் வன்றாண்கால் சாய்தல்கண்டு
தானோர் கமடமதாய்த் தாங்கினோ—னூனத (௧௪)

வென்றியார் பொற்கட்பேர் வெய்யோ னுயிரினைவெண்
பன்றியாய்ச் சென்று பருகினோன்—வன்றிறல்சேர் (௧௫)

வெங்கணார் பொன்னனைமுன் மென்றானைப் போழ்ந்துநர
சிங்கமாய் வந்து தெழித்தொறுத்தோ—னங்கணிலவ் (௧௬)

விஞ்சுபுகழ் மாவலிபால் வேண்டியடைந் திப்புவியைச்
செஞ்சரணொன் றாலளந்த சேயொளியோன்—றஞ்சப் (௧௭)

புறவே பொருட்டாகப் போந்து துலைபுக்
கறமே படைத்த வரசுந்—திறன்மேவு (௧௮)

மும்பர்பிரான் வெள்விடையா வூர்ந்துபகை செற்றவற்குப்
பைம்பொ னகரளித்த பார்த்திபனு—மம்புவியில் (௧௯)

---

(௧௮) அரசு—சிபிச்சக்கரவர்த்தி. (௧௯) பார்த்திபன்—புரஞ்சயன்; இவனே இந்திரவாகனெனப்படுவோன்.

வந்துமா ரிக்குநிகர் வண்மைகொண்டு காத்திட்ட
துந்துமா ரப்பெயர்கொ ண்டோனும்—மிந்துநுதன் (௨0)
மாதர் வயிற்றின் வருமோா மகவைத்த
ஞேதகட்டிற் றந்த வுரவோனும்—பேதமிலா (௨க)
தீராருண் டெல்லை யெரியரசு தானுண்ண
வாராநெய் யூட்டு மடலோனு—மோராத (௨௨)
வாசிரியன் சாபத் தலைப்புண்டுஞ் சேணுலவு
மாசி லுடுபதஞ்சேர் மன்னவனுங்—கோசிகன்றான் (௨௩)
செய்யாக் கொடும்பாடு செய்துநதன் கட்டுரைகள்
பொய்யா விழுச்சீர்ப் புரவலனும்—பொய்யாத (௨௪)
தாதை புனற்கிறையின் சாபத்தாற் பட்டவெலா
மாதவத்தாற் றீர்த்த வலியோனு—மோதம்வளை (௨௫)
ஞால மகழ்ந்து நரலைகண்ட மைந்தர்தமைச்
சால வளித்த தராபதியுங்—கோலநெடு (௨௬)
மாலுந்தி வந்தோன் வரவிடுத்த கங்கைதனை
ஞாலந் தனிலழைத்த நாயகனு—மாலோன் (௨௭)
வழிவந்த வேனளனை வன்கலிதான் சூழ்ந்து
விழிவெந்து வேறு வெருட்ட—வுழிதந்து (௨௮)

---

(௨க) உரவோன்—யுவனாச்சுவன். (௨௨) அடலோன்—அமபரீஷன்.
(௨௫) வலியோன்—உரோகிதன். (௨௬) தராபதி—சகரன்.

தன்பா லடையத் தனிக்கலியை நீக்கும்விஞ்சை
யன்பா லளித்த வடலோனு—நன்பாரில் (உகூ)

வந்தினிய மாதை மருவவெதிர் சாபத்தா
னந்தினியைக் காதத நராதிபனு—முந்திணையோர் (௩0)

தோன்றிப் புகழ்கொண்ட தூய கதிரரவி
யான்ற குலத்தி லவதரித்தோ—னான்றிவரு (௩க)

மென்றுமறைத் தானத்தா னேற்றத்தன் பாலின்
னென்றுமறைத் தானத்தா னேற்றத்தன்—றன்றிருப்பும் ()

பாதம் படக்கல்லைப் பண்டுருச்செய் திட்டான்றப்
பாதம் படக்கல்லைப் பண்பினன்—றுதைசொலத் (௩௩)

தண்டா ரணியந் தமிவருவான் றண்டுளவத்
தண்டா ரணியந் தமிவருவான்—றண்டாத (௩ச)

வையம்பன் மாசடையான் வற்கலையான் மற்றவர்போல
வையம்பன் மாசடையா வற்கலையான்—மெய்யொழிக்கும் ()

காலே தருமற் கடப்பரியா ருன்னவருள்
காலே தருமற் கடப்பரியான்—சாலவன்பின் (௩௬)

வந்துவந்து தந்தமத மாவலன்றும் வானடிக்கேழ்
வந்துவந்து தந்த மதலையான்—சிந்தரவி (௩௭)

---

(உகூ) அடலோன்—இருதுபன்னன.

(௩0) நராதிபன்—திலீபன். இவர்களின் சரித்திரவிரிவை ஸ்ரீமத் பாகவதம், இரகுவம்சம் முதலியநூல்களிற் காண்க.

னஞ்சுக் கிரிவனல ஞகியும்பர்க் காத்தபிரா
னஞ்சுக் கிரிவ னலஞறன்—விஞ்சுங் (௩அ)

கவந்தவி ராதகரத் தானைகடிந் தாஞ
கவந்தவி ராத கரத்தான்—பவந்தவிர்ந்து (௩௯)

மாயமா ரீசன் வயங்கிளரக் கொண்டான்மா
மாயமா ரீசன் வயங்கொளியான்—றய்மொழியாற் (௪0)

றனமருங் கானந் தலைப்பெய்தா னந்தணர்க்குத்
தானமருங் கானந் தலைப்பெய்தா—னேனைத் (௪௧)

திரியம் பகவிலங்கை தீர்த்தா னிறுத்த
திரியம் பகவிலங்கைத் தீர்த்தன்—பரிவோடு (௪௨)

மச்சம்பா திக்குஞ் சிறையளிப்போ னுன்னநர
கச்சம்பா திக்குஞ் சிறையழிப்போ—னிச்சயமா (௪௩)

வவ்வுகத்தி லுத்தரதிக் கோர்ந்தபடி தென்றிசையு
மிவ்வுகத்தி லேமகிழ வெண்ணியோ—வெவ்வமிலாக்(௪௪)

கங்கையினு மேலாகுங் காவேரி யென்பதனை
யெங்கும் விளக்கிவர வேய்ந்தேயோ—பங்கமிலாத் (௪௫)

தாயத்தார் நாடுந் தனதேயென் றட்சிபெறு
நேயத்தா லெய்த நினைந்தேயோ—மேயக்காற் (௪௬)

கோசலத்தார் பேரின்பங் கொண்டதுபோற் சோணாட்டு
மாசனத்தார் கொள்ள மனம்வைத்தோ—வாசிலா (௪எ)

தோரும் குறிப்பிதுவென் றுற்றறியா வாறுநெடுங்
காரும் பொழிலுங் கலந்தோங்கிப்—பாரெங்கு (சஅ)

மெல்லை வளாகமிவை யென்றறியா வித்தாரத்
தில்லை வளாகச் செழுந்தலத்தி—னல்லபிள்ளைப் (சகூ)

பெற்றாள் குளத்தின் பெருங்கரைக்கீழ் பாம்புன்செய்
நற்றானத் தின்கீழ் நயந்தருளி—யுற்றே (ருய)

யொரு[illegible]ச்சி வாயகுடி யோங்கவந்த சீர்த்தித்
திருவீர பத்திர தேவன்—றருபுதல்வர் (ருக)

மூவரி னன்பு முதிரு மொருவேலுத்
தேவ னயலார் சிலரோடு—மோவில் (ருஉ)

பசனைமடங் கட்டுமிடம் பார்த்துமுத ஞளத்
திசையனைய தானத்தைச் சிந்தித்—திசைசகமா (ருங)

மோரா யிரத்தெழுநூற் றுற்றவெ[illegible] பத்தைந்திற்
சீராய துந்துபிப்பேர் சேர்வருடத்—தாரிரவி (ருச)

தேளோரை சேர்கார்த் திகைமாதந் தெய்திநன்
ஞளோர் பனிரண்டி னண்ணுபுதக்—கோள்வாரம் (ருரு)

பஞ்சமி பூருவ பக்கமுத்தி ராடநா
ளஞ்சியநா லாங்கா லிரவியுதித்—தஞ்சு (ருசா)

---

(ருச) இதுமுதலாகக் கூறியிருக்கும் கிரகங்களின் நிலைமை முதலியவற்றின் விரிவை இப்புத்தகத்தின் முதலிற் சேர்த்திருக்கிற இராமஜாதகத்திற்காண்க.

கடிகை யளவிற் கதிரனுட மூன்றிற்
படிமகனு ளீற்றயல்பிற் பாதத்—தடைய (௫௭)

விசாகமயற் பாதத்தின் மேயபுதன் வைக
வுசாவுகுரு சித்திரைமுன் னூற்றுங்—கசாவின்றி (௫அ)

நிற்பவெள்ளி யவ்வனுட நேர்மூன்றுங் கான்மந்தன்
பொற்பமரத் தம்முதற்காற் போந்திருப்ப—நற்கேட்டை ()

முன்றி லிராகு முதலைந்தி னொன்றின்மற்றம்
தேன்றுறையச் சாப விலக்கினத்து—ளான்றநிலன் (௬0)

செப்பமிட்டுக் காடு திருத்திமடங் கட்டுவிப்பா
னொப்ப முகூர்த்த முகூற்றுதலுந்—தப்பில் (௬க)

கொழுங்கருவி யிற்றட்டங் கோப்பவென்னே யென்று
விழைந்த வுளத்தோடு மேவி—யழுங்கவின்றிப் (௬உ)

பக்கம் பறித்தெடுப்பப் பைந்தொடியாள் வைதேகி
தக்கதிருத் தம்பிகா றந்தமகன்—சக்கரமுற் (௬௩)

றின்ன வுருவுதன்றோ டேய்ந்திருப்பக் கண்டுநெஞ்ச
நன்ன ருருகி நலந்தழீஇ—மன்னி (௬௪)

யெடுத்தங் கொருதடத்தி லிட்டுச் சிலநா
ளடுத்துக் கழிந்திடலு மப்பா—லெடுத்தவிடத்

தோர்குடம்பை கட்டியத னூடுவைத்துப் பூசைமுறை
யார்வமுடன் செய்வித்திட் டன்றுமுதற்—பார்முழுதும் ()

வந்துதவு பல்பொருளால் வைகு மிடத்தினில்வா
னிந்துதவழ் கோயி லியற்றியே—சந்தமறை (௬எ)

யாகமத்தின் பாங்கா யதிலே பிரதிட்டித்
தோகைமலி பூசை யுஞற்றுவிப்ப—மோகனஞ்செ (௬அ)

யிஞ்சிப் புரிசை யெழின்மான மீதிலிருந்
தஞ்சிப் புகுந்தார்க் கவயமளித்—தெஞ்சலின்றிக் (௬௯)

கோதையர்கள் சேயில்லைக் கோமானே யென்றுகுறை
யோதுபவர்க் கின்சே யுவந்தருளி—வாதனைசெய் (எ0)

நோயுடையார் கட்குற்ற நோயகற்றித் தொன்றுதொட்ட
பேயுடையார்க் கப்பீழை போர்த்தொழித்துச்—சேயபத()

முள்ளி வருபவர்கட் குள்ளி யதுகொடுத்து
வள்ளிய னாகி வயங்குவோன்—கள்ளக் (எ௨)

கதவன் கொடுங்கும்ப கன்னனிலை நீர்ந்து
சிதைய வதைத்திட்ட நீரன்—றதைபடைக (எ௩)

ளேந்துபல கையாற் கிகலான் பரத்துவனார்
வாய்ந்த விருந்தூண் மகிழ்ந்துடையான்—றாந்திறைசெ ()

யம்போதி கைக்கொண்டா னய்மோ சரமனைத்து
மெம்பா விருப்ப வெனக்கொண்டு—வெம்போரார்ப் (எ௫)

---

(எ௩) முதல் (௬௬) வரையில் வீட்டுக்கருவிப்பெயரும், இடப்பெயரும், மிருகப்பெயரும், பறவைப்பெயரும், நீர்வாழ்வனவற்றின் பெயரும் ஒலித்தலைக் குறிப்பினாலுணர்க.

போக்கினான் பொன்னை பொய்ம்மானின் சாரோடித்
தாக்கினான் முற்றத் தமியன்வலி—தேக்குசரக் (எசா)

கூடுவாய் சீர்முதுகன் கூடார்தொக் கூனைவிடுத்
தோடுமா றம்புசொரி யூற்றத்த—னீடுசீர்த் (எஎ)

தோள்வளையான் றண்டகத்தார் சூழ்ந்தலறத் தீர்ப்பலெனை
வாள்வினையி னுத்தரஞ்சொ லாண்மையான்—றுள்விரும்பித்

தாழ்வா ரகத்திருப்போன் றையலாள் கூடத்தான்
சூழ்வே யடவிபுகுந் தொல்லையோன்—வாழ்வானோர் (எகூ)

மேனிலையா னுட்படியான் மேவா ரகத்தினிடைக்
கூன னெடுவாற் குரக்கினத்தைச்—சேனையெனக் (அ0)

கூட்டினான் வில்லுண்டை கூனிகூன் மேற்பாய
மாட்டினான் கன்று மனச்சவரிக்—கீட்டுவீ (அக)

டொட்டகத்தைத் தந்தா னுயர்தா மனையுந்திச்
சிட்டனரி தானுய்த் திகழொருவன்—பட்டவெழிற் (அஉ)

பன்றி யுருவன் பகரம் புலிவதனி
கன்று மனத்திற் கறையகற்றச்—சென்றுபைம்பொன் ()

மான்பிடிக்கத் தான்முயலு வன்மைகுரங் காவிறல
னுன்குதிரை யேறி நலியுநாட்—டான்கதிர்த்து (அச)

நிற்குஞ் சரக்கைய னீடு சினக்கனக
நற்குஞ் சரமஞ்சு நாரசிங்கன்—முற்ககனத் (அரு)

தாங்கழுதை யோவென் றரக்கி யலறவவ
ளோங்குறுப்புக் கொய்வித்த வுத்தமங்கன்—வீங்கியபூம் ()
பொங்க ரடிச்சிலையைப் பொற்பாவை யாக்கினான்
வெங்க ரடித்தாளே வேந்தர்பிரான்—பொங்கி (அஎ)
யெறியு மயில வனிருங்கருட னேறி
யறியு மவருக் கருள்வோ—னெறிமையால் (அஅ)
வாழியசொக் கைப்பிளந்த வண்கோழி யான்மாமன்
கோழிலைய பூந்துளவன் கோட்டானைச்—சூழிடங்கர் (அகூ)
பற்ற வொழித்தானிப் பார்காக்கைக் கேற்றத்தான்
கற்றவஞ்சக் காக்கையினோர் கண்ணழித்தான்—முற்றுலகி
லெவ்வுயிரு மீனுமை யீன்ற முதலையன்
செவ்விய வாழித் திருக்கையன்—பௌவநிறை (கூக)
யம்பருந்து கும்பமுனிக் கன்றவய மீந்தபிரான்
வெம்பருந்து சூழவரு வெள்வேலான்—பைம்பொனிலங்()
காடையா னன்பர்க் கவுதாரி யான்பொங்கர்
மாடுசூழ் தில்லை வளாகமா—னீடுமண (கூங)
மீட்டுஞ் செழுந்தென்ற லேறிப் பரவியின்பங்
காட்டு மொருவசந்த காலத்தி—னட்டமுற்ற (கூச)
சித்திரை மாதஞ் செழுமீன் புணர்பூச
முத்தம மான வுயர்நவமி—யத்திருநாட் (கூரு)

சாந்தி யிழைத்துத் தனிக்காப் பணிந்தன்பர்
பூந்துவ சாரோ கணம்புரிய—வாய்ந்தநீ (௯௬)

ரார்கலியைப் போல வளவுபடா வாச்சியத்தி
ேனார்கலி யொல்லென் றுடன்பரக்கச்—சீர்கலிக்குந் (௯௭)

துய்ய மறுகிடைநா டோறும்பல் லூர்தியினுஞ்
செய்ய விமானத்துஞ் சென்றுசென்—றெய்துழியோர் ()

வைகு லிரவின் மலரமளி மீதுதிரு
மெய்கலந்து மெல்ல விடிந்ததற்பின்—மொய்கவின்சேர் ()

மையுலவு சோலை மணிமண் டபநடுவிற்
றையலொடு சென்று தனத்திருந்து—செய்ய (௧௦௦)

திருவடிக்கே யன்பு செயுமறையோ ரீண்டிப்
பொருவில்சங் கற்பம் புகன்று—மருவியுயர் (௧௦௧)

காவேரி சிந்துகங்கை காளிந்தி கன்னியொடு
பூவேரி சிந்து புனற்கபிலை—மாவாரி (௧௦௨)

நன்னதியி னீரினொடு நல்ல துவர்பத்து
மன்னுவிரை யைந்தும் வயக்கியே—துன்னுநறை (௧௦௩)

யோமா விகைமுப்பத் தோரிரண்டுந் தோயவைத்து
மாமா லளிப்ப மலிநீரிற்—றேமோவு (௧௦௪)

கத்தூரி நற்புழுகு காமர்பனி நீரொடளாய்
வைத்தூ றியதைமேல் வார்த்திட்டுக்—கொத்தாரும் (௧௦௫)

வேதியர்கள் வேதம் விளம்ப விளங்குமெய்யிற்
றாதிவரு மொற்றாடை சார்த்தக்கொண்—டாதரஞ்செய் ()

தாதை மொழியாற் சடையைப் புனையிடத்திற்
சோதிமணி மோலி சுடரவைத்துச்—சீதமதி (௧0எ)

நெற்றிமேற் றாமரைமே னீலமணி வண்டிருந்தாங்
குற்றதிலக மொளிர விட்டு—முற்ற (௧0அ)

வயிரிலங்கைப் போரீற் றயன்றுதிக ளேற்ற
செவிமகர குண்டலங்கள் சேர்த்திக்—கவியின்பா (௧0௯)

லன்றுபி ராட்டிக் கடையாளந் தந்தவிரல்
சென்றுற வாழி செறித்திட்டுக்—கன்றமர்கை (௧௧0)

நம்பன் சிலையை நடுத்தறித்த கையிணைக்குச்
செம்பொன் மணிக்கடகஞ் சேர்த்தியே—யம்பொன்விற் ()

சேகுசெறி திண்டோட் டிருவழகுக் கேற்பப்பொன்
வாகு வலயம் வயக்கியே—யோகைதரு (௧௧௨)

மூவர் வடிவு மொருவடிவாய் முன்வந்த
பாவனை காணும் படியதா—யோவலறு (௧௧௩)

மேகத்தின் மீதாக மின்னல் புரள்வதுபோ
லாகத்திற் பூணூ லதுசார்த்தி—மோகத்திற் (௧௧௪)

பூத்தவிசின் மாதர் பொருந்திடமேற் பூவாமே
கோத்த மணியாரங் கொண்டணிந்து—காழ்த்த (௧௧௫)

மலையார நாவிவிரை மட்டித்த செச்சை
புலராத வாரகம் பூசித்—தலநீடு (ககசு)

நீலமலை மேற்கங்கை நீர்வீழ்ந்தாங் குத்தரிய
நால மலைத்தோ ணயந்தணிந்து—சீலநிறை (ககஎ)

வற்கலைதாய் தந்தவுடன் வாங்கித் தரித்தவிடம்
பொற்கலை யாரப் புனைந்தருளி—நற்கடல்சூழ் (ககஅ)

ஞாலமழி யாதூழி நாளில்வைத்துக் காத்தவிட
மேலுதர பந்தனத்தை வீக்கியே—சால (ககக)

வுலம்புமுனி சாப மொழித்ததிருத் தாளிற்
சிலம்புங் கழலுஞ் செறித்து—நலங்கொண்ட (கஉ0)

விண்ணு டியரும் விரும்புதிரு மேனிநிலைக்
கண்ணாடி கொண்டு கடைக்கணித்தே—புண்ணடி (கஉக)

யாறு சுவையி னமைத்ததிருப் போனகமு
மாறு படாத வகைக்கனியுங்—கூறுபட்ட (கஉஉ)

வாம்பலசிற் றுண்டிகளு மார்ந்தருளித் தூநீராற்
பூம்பவள வாய்திருந்தப் பூசியே—மேம்படுநற் (கஉ௩)

றக்கோலங் காய்ச்சுண்ணை சார்ந்த களிப்பாக்குத்
தொக்கோங்கு வாசச் சுருளேல—மிக்கோர் (கஉச)

விரும்பு மிலவங்க மேயகருப் பூரத்
தரும்பஞ்ச வாச மடக்கித்—திருந்தன்ப (கஉரு)

ரோழடுக்குத் தீப மெதிரெவருங் கண்டுகளித்
தூமொழாடுக்கி நிற்ப வுவந்தெடுத்துத்—தாழ்வில் (௧௨௬)

விதியாறு நீங்காமல் வேதம் புகன்று
பதினா றுபசாரம் பண்ணித்—துதியா (௧௨௭)

மிருதி வழிநிற்கும் வேதியர்க ளீண்டிச்
சுருதி யருச்சனைகள் சொல்லத்—திருவடிக்கே (௧௨௮)

செய்துகருப் பூரத் திருச்சுடர்நீ ராஞ்சனமுங்
கையதனி லேந்திமுனங் காட்டியபி—னாப்பெனவே ()

முன்னர்த் தமிழின் முதுமறையு மூதறிஞர்
பின்னர் மறைநான்கும் பேணிவந்து—பன்ன (௧௩0)

மிருதி மறையோர் வியன்சுருதி சொல்ல
வருதிறல்சேர் பாக வதர்தாம்—பெருகியநற் (௧௩௧)

சீர்த்திதனைக் கீர்த்திப்பத் திவ்வியநா மங்கள்சொல்லி
யார்த்த பெரியோ ரகமகிழ—வார்க்கொங்கைக் (௧௩௨)

கோட்டானை யாய குலமாத ரோடருளைக்
காட்டானை யொன்று களித்துவர—மாட்டுத் (௧௩௩)

துருவைமிசை யொன்றிரண்டு தோகையரோ டொன்றி
யிருவ ரொருபாங்க ரெய்த—வொருபான் (௧௩௪)

---

(௧௨௮) ஸ்மார்த்தப் பிராமணர்கள்.

மலைமான வேதா மணாமா னவனைக்
கலைமா னுடனே கலப்ப—நிலனேந்து (௧௩௫)

பாயலாய் விண்செல் பரியா யிடந்தவறிற்
காயு மிருவர் கலந்துவர—மீயுயர்ந்து (௧௩௬)

சீரியவெள் ளாம்பல் சிரஞ்சீவி ஞாளிமிசைக்
காரியொரு நால்வர் கதித்தெய்த—வார (௧௩௭)

விடாநெடிய சோதி விரிகதிருஞ் சேயுங்
கடாநெடுவை யங்கள் கலப்ப—வடாத (௧௩௮)

விபாவரிகாய் புட்பகத்தின் மேயவிமா னத்திற்
குபேரர்கள் கூடிக் குழுமத்—தவாதசீர் (௧௩௯)

மான நிருதிபேய் மல்கவய லோரிருவர்
மீனிடத்து மானிடத்து மேவிவர—வாணியனுஞ் (௧௪௦)

செவ்வாய்வண் டாரை கருவாய் திருவோனவ்
வொவ்வாள்கேள் சுங்க னொருங்கெய்த—வெவ்வாயு (௧௪௧)

மோங்கு திணையி லொருமைப்பா லீரெழுவர்
வீங்குதிற லெண்மர் விரைந்தெய்த—வாங்கிலங்கெண் ()

ணைந்தாறு கொண்டா ரமரர்கண மீரொன்பான்
பிந்தாது முன்னே பெயர்ந்தெய்த—நந்தாமே (௧௪௩)

கோவ லிருளினுறு கூராழி யாற்கண்ட
பூவரு பொய்கைபேய் பூதனெனு—மூவர்களும் (௧௪௪)

(௧௪௩) ஐந்தாறுகொண்டார்=ஏகாதசருத்திரர்.

வையம் புகழு மழிசைப் பதிப்போதந்
துய்யுந் தமிழுரைத்த வுத்தமனுஞ்—செய்யிடத்தில் (கசறு)

வெண்குருகூர் வண்குருகூர் மேவிமறை யாயிரமா [வக்
மண்குளிர்செய் செந்தமிழ்சொல் வண்மையனு—மெண்குல

கோர்ளு ருதித்துக் குருகூரன் ருட்கன்புற்
ருளு மதுரகவி யாழ்வானும்—வாருடனே (கசஎ)

பண்டுசிந்து மீதுசென்று பைங்கொண்டல் காட்சிதரக்
கண்டுகொண்ட பூங்கொல்லிக் காவலனு—மண்டர்தொழ()

வல்லியக்கூத் தாடினன்பா லன்பிற் றமிழ்புனைந்த
வில்லிபுத்தூர்ப் பட்டனெனும் வேதியனு—நல்லதந்தை()

நாடித் தினந்தொடுத்த நன்பூந் தொடைமாற்குச்
சூடிக் கொடுத்த சுடர்த்தொடியு—நீடுற்ற (கரு0)

மன்பதை யீண்டிய மண்டங் குடிப்போந்த
வன்ப ரடிப்பொடிப்பே ராழ்வானு—மின்பமிகு (கருக)

கையுடை யாழிற் கருங்கொண் டலைவசித்து
மெய்யிடம் பெற்றுற்ற மேலோனுஞ்—செய்யநெடும் ()

புத்தவி காரம் புகுந்துருவங் கைவர்ங்கி
யத்தன் றிருப்பணிக்கே யாக்கினனு—மெய்த்தவத்தா ()

லாய்ந்தளித்த கண்ணிநுண்ணீ ராரு யிரம்புகன்று
வாய்ந்த பிரபந்தம் வாங்கினனு—மேய்ந்துளபன் (கருச)

ஞானவந்தான் செய்யாக்கி நம்பியைவென் றேநிலைத்த
வானவந்தா னென்று மருண்முனியுங்—கோளில்பெரும் ()

பூதூரிற் றேன்றிப் புனைபல் பெயரேற்று
வேதம் பொருள்செய்த வித்தகனு—மாதவைய (கருசு)

வேத முழக்கி விளங்குபிர மாணநகத்
தேதின் மதமாக்க ளீடழித்து—வாதின்மால் (கருஎ)

சீர்த்திக்கோர் வித்தாய்த் திகழ்ந்தோ னளவில்பெருங்
கீர்த்திப் பராசரப்பேர்க் கேசரியு—மார்த்தபுகழ் (கருஅ)

மாவலிவா ணற்கருளி வண்புளிக்கு வீடுதவி
மேவரிய நற்சமய மேவுவித்துப்—பூவுலகிற் (கருகூ)

பல்கு தனதுறுதி பண்ணவனே பன்னவருண்
மல்கு மணவாள மாமுனியுந்—தொல்லுலகிற் (கசு0)

பன்னு குருவின் பரம்பரையிற் சீர்த்தியொடு
பின்ன ருதித்த பெரியோருந்—துன்னியவு (கசுக)

ணீண்டுமெழு புத்தூரன் கென்றுநேசிய காதனத்துப்
பூண்டுக ழோர்டிலங்கு புண்ணியரும்—வேண்டிவந் (கசுஉ)

தன்னோ ருடன்கூடி யாரா மகிழ்ச்சியராய்த்
துன்னு விருபாலுஞ் சூழ்ந்துதிரு—மின்னுள்வாழ் (கசுங)

மார்புடையாய் போற்றியிகல் வாளரக்க ரீடழித்த
சீருடையாய் போற்றியென்று சேவிப்ப—வார்தடக்கை ()

வேத்திரங் கொண்டு விரைந்து நெருங்கிவருங்
காத்திரர் தம்மைக் கடிதுசென்று—நீத்து (௧௬௫)

நெருக்கொதுக்கிச் சந்நிதியி னேொவருங் காணத்
திருத்திவருங் காலினது செம்ம—னிரைத்துவைத்து ()

முன்னடப்பப் பேரி முருடு தடாரிமொந்தை
பன்னுபல வாச்சியங்கள் பம்பிவரத்—துன்னுதவ (௧௬௭)

நாரதர் தும்புரு நான்முக ஞவுறை
பாரதி யென்றிவர் யாழ்பயில்—சீரினர் (௧௬௮)

வந்து மருங்கு நரம்பின் வயங்கிய
மந்த சுரங்கள் வழங்கவி—ழைந்திரு (௧௬௯)

பங்கினு மும்பர் பயின்ற வரம்பையர்
சங்கினு மந்த நிறைந்தத—மங்கள (௧௭0)

நின்றெழு மின்ப நிரம்பி வருஞ்சுர
மொன்றிய செங்கை யொளிர்ந்திட—நின்றெதிர் (௧௭௧)

பாய நடனம் பரிந்தியற்றிக் கொண்டேகத்
தூய முனிவர் தொழுதேத்தத்—தோய்நடநூ (௧௭௨)

லாய்ந்த முறைமைதனி லாட்டுவோர் தம்மோடு
தோய்ந்தவிசை பாடுநர்பின் சூழ்ந்துவர—வாய்ந்தபல ()

வாரியலுங் தோற்கருவி மாக்களெல்லாம் பின்னிற்பத்
தோரிய மாதர் தொடர்ந்தெய்தச்—சேர (௧௭௪)

விரத்திகொண்ட மாதவரும் வெஃகுமெழின் மேனிப்
பரத்தையர்கண் மங்கலமுன் பாடி—யருத்திசெய்மா ()
னம்பிதெய்வப் பாணிசொல்லி நால்வருணப் பூதனையும்
பம்புசுட ரிந்துவையும் பாடியபின்—றப்பயில்விற் (கஎக)
றுளத் தியல்பு தழுவப் பிறநீங்க
வாளத்தி யோடே யமைவுபெறக்—கேளுற்ற (கஎஎ)
வார மிரண்டும் வரிசையிலே பாடியப்பா
லேரிய வாரத்தி னீற்றினிற்சேர்ந்—தாருங் (கஎஅ)
குழலோ டியாழ்மத் தளமுங் குடங்கொண்
முழவு மியக்க முறையே—வழுவிலா (கஎகூ)
வாமந் திரிகையுட னந்தரம்வே றில்லாமற்
றமந்தக் கூத்திரண்டின் சார்பறிந்து—தோமி (கஅ0)
லகக்கூத் தினைமுக் குணமு மமையத்
தொகுத்தாறு நன்னிலையுந் தோன்ற—வகுத்த (கஅக)
வருத்தனை நான்கை வகைப்பாத மீரெட்
டுருத்திகழ் மெய்க்கிரியை யொன்ற—நிருத்தக்கை (கஅஉ)
முப்பது மாறு முறையே விலக்குறுப்பி
னொப்பப் புணர்த்தி யுயர்தேசிக்—கிப்பதங்கண் (கஅங)
மூவெட்டு மூசாத முன்வடுகிற் கீரேழு
மாவிட்ட வண்ணம் வயங்கவே—மேவுற்ற (கஅச)

மெய்சாய் விடைநெறிவு மேற்சுழிவோ டாங்கணைதல்
கைதூக் கசைத்தல் கலைபற்றல்—கைகள் (க௮௫)

விரித்தல் குவித்தலிவை சிங்களத்தின் மேலென்
றுரைத்தவுடல் வர்த்தனையு மோங்க—நிரைத்த (க௮௬)

வவிநய நூல் வல்லா ரகமகிழ வேமிக்
கவிநயத்தோ டேயனைத்துங் காட்டிப்—புவிகளிப்ப(க௮௭)

மெய்க்குற்ற மெட்டுமிலார் மென்பாட னல்லசுவை
மொய்க்க மிழற்றியே முன்னடப்ப—மைக்கடலைத்(க௮௮)

தாண்டிச் சிறையிருப்புத் தானறிந்து வந்தன்பு
பூண்டவனு மக்கொடிமுன் போந்தெய்த—வீண்டிக்(க௮௯)

கிளர்தாய் கொழுங்கானைக் கிட்டிச்செய் யென்ற
வளர்தவந்தா னன்றுவந்தான் வந்தான்—றளிர்மெய்த் ()

திருவார் சிறைபயிலச் செய்த விலங்கை
மருவார்மேற் கண்சிவந்தான் வந்தான்—பொருதே (க௯க)

கதத்திற் கராம்பிடிப்பக் காத்தருணீ யென்ற
மதக்களிற்று முன்வந்தான் வந்தா—னிதத்திற் (க௯௨)

பொருவாரு மில்லாப் புகழெழின்முன் றேற்று
வருதேவர் மேனிவந்தான் வந்தா—னுருகி (க௯௩)

யழுத்தா தரவுடனே யல்லும் பகலும்
வழுத்தார்முன் வாராதான் வந்தான்—விழுத்தகுசீர்(க௯௪)

வந்தான்வந் தான்புயமி வர்ந்தா னடியார்ப
வந்தான் கடியவந்தான் வந்தான்காண்—முந்தோர்வன் ()
குன்றெடுத்து வெண்ணெயளை கொண்டுண்ட கோன்வந்தா
னென்றெடுத்துச் சின்ன மினிதியம்ப—நின்றநெடு (௧௯௬)
விண்டலத்தைக் கீண்ட விமான நவமணிகொண்
மண்டபத்தை விட்டு மகிழ்ந்தெழுந்து—தொண்டர்தொழத்
தோளுக் கினியான்மேற் றேவைகையொடுந் தானிவர்ந்து
நீளத் திகழ்சுடர்க ணின்றெறிப்பக்—கீளுற்றிவ் (௧௯௮)
வண்ட நடுங்க வதிர்வெடியெல் லாங்குமுற
மண்டுகுடை பிச்ச மலிவெய்த—வெண்டிசையு (௧௯௯)
மாமகர தோரணங்கள் வண்சுருட்டி யாலவட்டங்
காமர் கொடியின் கணநெருங்கத்—தூமணிகொள் (௨௦௦)
வெள்ளைக் குடைநிழற்ற வெண்சா மரையிருபால்
வள்ளைக் குழைமாதர் வந்திரட்ட—வொள்ளியநீள் (௨௦௧)
குன்றன்ன பைம்பொன்மணிக் கோபுரவாய் தல்கடந்து
நன்றுநடைப் பந்தர் நடந்தருளி—யொன்றுவிசும் (௨௦௨)
போங்கு சிகரத் தொளிர்மணித்தேர் மீதுமலர்
தாங்கு மரசியொடு தானேறிப்—பாங்குபய (௨௦௩)
சிங்கா சனத்திற் றிகழ்ந்திருப்ப மைம்மேனி
வண்காரைக் கண்டுவரு மஞ்ஞையென—வெங்கானிற் ()

றங்கிளைசெய் திங்காற் றழுவு சினமொழிப்ப
வெங்கும் பராய்வருமா னீட்டமெனத்—தங்கண்ணிற் ()

காண வினிய களிறனைய செவ்விகண்டு
பேணியெதிர் கொள்ளும் பிடிகளென—மாணெழில்சேர்

சீத முகமாஞ் செழுமதிகண் டெய்துமொரு
கோதில் சகோரக் குழாமென்னச்—சீதையெனு (உ0எ)

மாது நடக்குமொரு மாட்சிநடை கற்கவருஞ்
சாதி யனப்பெடைக டாமென்ன—வோதநெடும் (உ0அ)

பூதலத்தில் வாழும் புனையிழையா ருந்தேவர்
மாதலத்தில் வாழு மடவாரும்—பாதலத்து (உ0௯)

நாக மடவியரு நல்யாழோர் கூட்டத்துப்
போக மடவியரும் போகாதே—மோகனஞ்செ (உக0)

யேனைய நாட்டி னெழிலார்ந்த மங்கையரு
மேனிலையின் முன்றில் வியலிடத்தும்—வானளவு (உகக)

மண்டபத்து மேனிலைசேர் மாடத்துந் தெற்றியினுந்
தண்டமிழின் றென்றல்வரு சாளரத்துங்—கொண்ட (உகஉ)

வரமியத்தும் வேதி யகத்தும் பலவாப்
பரவு மறுகிடத்தும் பைங்கா—விரிதலத்துந் (உகஙு)

தெய்வப் பவனிக்குச் செய்தவலங் காரம்போ
லைவுற் றிடைதுவள நண்ணியற—றுவ்வுற்ற (உகச)

பைங்காரும் வேலைப் படிகடலுங் காயாவுங்
கொங்கார் குவளைக் குருமலருஞ்—சிங்காத (௨௧௫)

நீலப் பொருப்பு நிழன்மணியு மொவ்வாத
கோலத் திருமெய்க் குளிர்வனப்புஞ்—சாலப் (௨௧௬)

புலர்காலைப் பங்கயமே போன்ற முகமும்
விலகாக் கருணை விழியு—மலர்மாதின் (௨௧௭)

கண்ணும் புருவமுநேர் கண்டகணை கோதண்ட
நண்ணுந் திருக்கை நளினமும்—வண்ணமுறும் (௨௧௮)

புன்னகையும் பூணும் புரிநூலுந் தாமரையை
நன்னகைசெய் சேவடியு நாடியே—யுன்னிப் (௨௧௯)

படையாத காமம் படையா வெதிர்நின்
றுடையா நிறையு முடையாக்—கடையார்ந்த (௨௨.0)

சங்குங் கலையுஞ் சரியத் தமதுள்ளம்
பொங்குகின்ற காமம் பொசிந்துவரத்—தங்கடங்கண் ()

மெய்சோர்ந் தணிகச்சு வீற முலைகள்விம்மக்
கைசோர்ந்து கையறவு காழ்ப்பேற—மைசோர்ந்து (௨௨௨)

கண்ணுஞ் சுழலக் கருங்கோதை கட்டவிழ
வெண்ணுகின்ற நெஞ்ச மிகந்தழிய—நண்ணியின்ப ()

மார்ந்துபிரிந் தால்வருமெய்ப் பாடன்றித் தங்கண்ணி
னேர்ந்துழி யன்ன நிலைத்தலுமே—நேர்ந்தவற்று (௨௨௪)

ளாதிமுத லில்லாமே யாறு வதின்மூன்று
வோதிய மெய்ப்பா டொருங்கெய்திச்—சீதச் (௨௨௫)

செழுந்தரள மாலைமுலைச் சீதையொரு பாலில்
விழைந்துறைய வீதிவரு வீர்நு—மழிந்தவொரு (௨௨௬)

மைந்தனைமுன் னேவி மடவார் மனச்செருக்கைச்
சிந்த விழைத்தியெனச் செப்பிவிட்டீர்—வந்தவனு (௨௨௭)

மையோ கொடும்பாவி யாவி தரிக்கவொட்டான்
கையோ வொழியான் கடிமலரின்—வையேவை (௨௨௮)

வாரியிறைத் தேநா மறுகில் வரப்பொரு
ஞரியனைக் கண்டா னமன்போல—வீரியமாப் (௨௨௯)

பொல்லாச் செயல்புரிதல் போதாதென் றேநீரு
மொல்லா விழைப்பமறு குற்றிவண்வாழ்—நல்லாளை ()

யிவ்வண்ணஞ் செய்ய வினைந்தீ ரினியாங்க
ளுய்வண்ண மெவ்வண்ண மோதுவீர்—செவ்வண்ண ()

மங்கை யொருத்தியுளம் வாடச் சிறைவைத்தா
னங்கவனை முற்ற வழித்திட்டீ—ரிங்கனுள (௨௩௨)

மாத ருயிரை வருத்துவீர் நீர்தாமோ
நீதி நடுவு நிலையுடையீ—ராதியிலே (௨௩௩)

மந்தரைமெய்க் கூன்மேல் வரிசிலையால் வில்லுண்டை
யுந்தி யவண்மேனிக் கூறுகண்டீர்—வந்தவொரு (௨௩௪)

---

(௨௨௫) மெய்ப்பாடு—கலங்கிமொழிதல்.

பெண்ணென் றிரங்காது பேருற்ற தாடகையைப் [வோர்
புண்ணுென்ற நல்லாகம் போழ்ந்தெறிந்தீர் — துண்ணென
சூர்த்தவிழிச் சூர்ப்பநகை தோய்குழன்மென் மூக்குமுதற்
கூர்த்தவாள் கொண்டொருங்கு கொய்வித்தீர்-பார்த்தவுட
னின்றெம்மை யிக்கோலஞ் செய்வீர்நும் வீரமெலா
மென்று மடவா ரிடங்காண்பீர்—நன்றுமலர் (உ௩எ)
மாதை யெரியிலிட்டீர் மற்றவண்மீண் டெய்தியபி
ேைதா கருப்பிணியென் றுன்னுமற்—றீதுபுரி (உ௩அ)
காட்டிற் புகச்செய்தீர் காட்டிருந்து பின்னுநுங்
நாட்டில்வரத் தீயில்விழ நாட்டினீர்—வேட்டுச் (உ௩௯)
சிறிதுமெம் பாலிரக்கஞ் செய்யீர்நுங் நெஞ்ச
மறியிற் கருங்கல்லே யாகும்—புறவிலண்டர் (உ௪0)
நாரியனைத்தோய்ந்து கண்ண னன்னித் தியபிரம
சாரியெனும் பேர்கொண்ட தன்மையயற்—காரிகையா ()
ரின்பெதுவு நாடாத வேகதா ராவிரத
னென்பதுப சாரவழக் கேயாகு—முன்சனகன் (உ௪உ)
சூழ்வித்த வேள்விதனிற் றேய்வின்முறித் தோர்மாதை
வாழ்வித்தீ ரென்பர் வறிதாகப்—போழ்வுற்ற (உ௪௩)
வச்சிலையோ வன்மை யனங்க னைமையொறுக்குங்
கைச்சிலையை நீர்முறித்தாற் காணலா—மெச்சுதிற (உ௪௪)

லஞ்சிய வெங்கட் கருள்செய்யீர் வீரனைப்போற்
செஞ்சிலை யொன்றேந்தித் தெருவருவீர்—பஞ்சியடி ()

மாதர்பகை கொள்ளாதீர் மந்தனையாற் பட்டவெலாம்
போது மினிவாளா போகுவீ—ரேதமின்றித் (உசகு)

தண்டகத்துச் சேர்ந்தானைத் தள்ளிவிட்ட தோர்ந்துறுமைக்
கொண்ட விருப்பாற் குறுகியதுங்—கண்டகவே (உசஎ)

டீது பொறுமலன்றோ சேர்ந்தவெமைக் காவாமே
காதுதல்செய் தால்யார் களைகண்ணோ—வோதொருவன் ()

றீதுசெய்தால் வேந்தனிடஞ் செப்புவா ராங்கவனுங்
கோதுசெய்தால் வேறு குறிப்பதுண்டோ—நீது (உசகூ)

புரிபுலியூர்க் கஞ்சி நரியூர் புகுத
நரியூர் புலியூரா நண்ணிற்—பரிவதென்கொல் (உ௫0)

சாலவுரைத் தென்னுந் தனைய னொருகால
காலனையுங் காய்ந்த கடுப்பினான்—மேலிங்

கெமையடர்த்தா லென்செய்து மிச்செய விற்ப
நமையடைந்த வெங்களைக்க ணேக்கி—ரமைவுறுமைம் ()

மேனியீர் வார்சிலைக்கை மேதகையீர் நீரோகி
தானியீ ரன்பு தணவாதீர்—மோனநீத் (உ௫௩)

தோதுவீ ரெங்களுக்கோ ருத்தரஞ்சொல் வீரொன்று
மாதரார் சூழ மறுகிடத்தோர்—பேதை (உ௫௪)

## பேதை

மிருந்தகடுங் காமத்தீ வெம்பசிக்கூ ணின்பம்
பகிர்ந்தளிக்க வங்குரித்த பைங்கூழ்—சகந்தந்த (உருரு)

வன்னை வளர்ப்பச்சிற் றன்னைபே ரிட்டமையாச்
சின்னஞ் சிறிய செழுங்கிள்ளை—முன்னெய்த (உருசா)

வாழி சயந்தவடி வக்காக்கை பால்வளரா
தாழின் வளர்ச்சிபெற வோங்குகுயில்—வாழி (உருஎ)

சிருங்கிபே ரத்தரசன் சேர்த்தளிப்ப நாடா
தொருங்குசுவை மல்கா தொளிர்தேன்—மருங்குதா ()

னின்கனிதேர்ந் தீசற் கெனவொதுக்கு நற்சவரி
நன்கனிவாய் நண்ணாத நற்பிஞ்சு—தன்கற்பிற் (உருகூ)

கோடா வசூரயை கோதைமுடி சூட்டவுறா
வாடா மணநாறு மௌவன்முகை—நீடாழிச் (உசா0)

சேதுவிடப் போதுவாற் கென்று செழும்பொதியில்
போத வுயிர்க்குமிளம் பூந்தென்ற—லோதமிசைத் (உசாக)

தங்கு மொருவன் றடமா மலர்க்கரத்துச்
சங்க முயிர்த்த தனிமுத்த—மங்கிலங்கு (உசாஉ)

சேக்கையின்வாய் நஞ்சோடு சேராது தான்றோன்றி
மாக்கவினைக் கொள்ளவரு மாணிக்கம்—தேக்குவரி (உசாங)

மத்திக்குங் காலை வருமமுதை யேந்திவைக்கப்
புத்தப் புதிதுபுனை பொற்கும்பம்—பத்தியின்மிக் (உசாச)

காரற் புதன்கை யசலத் திருந்திலங்கை
சாரப் புகுதாத சஞ்சீவி—போரகத்து (உ௬௫)

வாட்டிறல்சேர் வல்லரக்கன் மைந்த னிகும்பலைபோற்
கூட்டி முடியாக் குழலினு—ளூட்டியசீ (உ௬௬)

ரங்கமைந்துந் தம்மெய்க் கமைவித்தா ருள்ளம்போல்
வெங்கண்மை யில்லா விழியினு—டங்குபுகழ்ப் (உ௬௭)

பின்னோர் பரத விலக்குமணர் பேணித்தாம்
பன்னாளுஞ் செய்கின்ற பத்திமைபோன்—முன்னை ()

வெல்லாப் பொருளும்வெளி யெய்தா சிலகரக்கும்
வல்லார் கவிபோன் மணிநகையாள்—வல்லோ (உ௬௯)

னெழுது மிராமா யணச்செஞ் சுவைபோல்
வழுவி லமுதொழுகு வாயா—டொழுதகைய (உ௭0)

மீன வுருவின் விளங்குமிரு கண்போல
வான வடையாள மாங்கெய்திப்—பேனநெடு (உ௭௧)

நீர்மலியும் வேலை நிலைகலக்குந் தூணோந்து
கூர்மவுறுப் புள்ளடங்கு கொள்கைபோற்—பார்வகிர்வான்

பன்றிக் குருளையுருப் பற்றுவதன் முன்னமே
தன்றிருக்கோ டுள்ளிருக்குந் தன்மைபோல்—வென்றிமிகு

தானவன் பண்டு தழற்சினத்தா லெற்றுமுன
மானநர சிங்கந்தூண் வைகுதல்போ—லானசிறு (உ௭௪)

வாமனனென் றெய்துங்கால் வானளவு மேனியந்தக்
காம ருருவிற் கரந்ததுபோற்—சேமமுற (உஎ௫)
முந்துதவு மூரிவல்வின் மொய்ம்போ டுதவுதற்கு
வந்தமழு வாளி மனமேபோற்—சிந்தையெலாம் (உஎ௬)
வெம்பிலங்கை யொன்னாை வீட்டவுன்று முன்னமே
யம்புவெரின் புட்டி லடங்குதல்போல்—வெம்புகஞ்ச ()
னூறு ருயிருண்ண வோர்நந்த கோன்மனையிற்
றூனே மறைந்துவளர் தன்மையைப்போ—லானத(உஎ௮)
கற்கி வடிவங் கருதி யெடுப்பதற்கு
நிற்கு மரியநிலை யேபோல்—விற்பனஞ்சேர் (உஎ௯)
நன்மறையோர் வன்மொழியா னம்பியொரு கான்மைந்தன்
றன்வலிமை யுண்மறைந்த தன்மைபோன்—முன்னமொரு
மைந்நாக மென்னு மலைவா சவற்கஞ்சித்
தன்னாக நீர்மறைந்து தங்குதல்போ—லுன்னுமு (உஅக)
னின்பளிக்கு நற்பே ரிரண்டெழுத்தே போன்மார்பின்
முன்புடைத்தல் சாலா முலையினு—ணன்பொருவில் ()
வான்மீகி முன்னுரைத்த மாநிடா தக்கவியைப்
போன்மே வமிழ்தம் பொசிதந்து—நூன்மேய (உஅ௩)
பண்ணமைந்த யாழும் பயிலுங் குயிலுமிவை [ணியே
துண்ணென்று வெள்கவொர்சொற் சொல்லுவா—ளெண்

தன்னிழலைத் தானழைப்பத் தன்னொடது பேசாமை
யென்னியைந்த மோவென் றிரங்குவாண்—மன்னுசிறு ()

கச்சு நெகிழ்த்துத்தன் கைப்பாவை பாலுண்ண
நச்சுமுலை யில்லையென நாடுவா—ளச்சமின்றி (உ௮௫)

யென்னேநின் மார்பி லிருக்கின் றவையெனக்கிங்
கன்னே திருந்த வமைத்தியென்றன்—பொன்னான(உ௮௭)

பாவை கலுழாமற் பாலூட்ட வென்றன்னை
கோவை பிடித்தாற்றிக் கூறுவாள்—பூவையுட (உ௮௮)

னீன்றதாய் வாளா விருந்த கொடுமைசொல்லிக்
கான்றுகண்ணீர் வாரக் கலுழுவா—ளூன்று (உ௮௯)

மயலார் சிறுமியர்பல் லாயிரவர் மைம்மி
னியலா ரொருங்குறச்சேர்ந் தெய்திச்—செயலாருஞ் ()

சிற்றி லிழைத்துச் சிறுமணலின் சோறட்டு
மற்றுமரப் பாவை மணனயர்ந்து—முற்றிநெடு (உ௯௧)

மாட மலியு மறுகினிடை யிங்ஙன்விளை
யாடல் புரியு மமைதியிலே—நீடம்பான் (உ௯௨)

முன்னமர மேழு முருக்கினா னன்பினர்பாற்
றென்னம ரஞ்சச் செயும்வீர—னுன்னிற் (உ௯௩)

---

(உ௯௩) இதுமுதல் சில மரப்பெயர்கள் முதலியன ஒலித்தலைக் குறிப்பினாலுணர்க.

கரும்பனையா னெஞ்சிற் கருதார்க்கு வேம்ப
னிரும்பனையார் தம்பா லிராதான்—றிருந்தியவிப் (௨௯௪)

பூவரச னத்திக்குப் போந்தருளிச் செய்திட்டான்
காவரசன் போற்றுங் கருவேலான்—மேவலர்த (௨௯௫)

னொச்சி யழித்தா னுவறும்பை வேய்ந்தொன்னார்
வச்சகளத் திற்சூடும் வாகையா—னச்சியருள் (௨௯௬)

வேட்டார்வத் தேன்றுமிக்க வெவ்வினையி லேயென்றுங்
காட்டா யணக்குங் கருணையா—னட்டியசீ (௨௯௭)

ராலத் தமர்ந்தபிரா னன்பரன்றி யிச்சியான்
காலக் கவியின் கதலிகையான்—சாலவும்வைத் (௨௯௮)

தூது வளையா னெருங்குசூழ் கள்ளியங்கு
தாது விளைதுளவத் தண்டாரான்—கோதிலாக் (௨௯௯)

காயாம்பூ வண்ணன் கணந்தேக்கு நற்கவியான்
மாயாத வீரை வரம்பிட்டான்—வீயாச்சீர் (௩௦௦)

வெப்புளியஞ் சேர்தானை வேந்தனக லாமலகத்
தொப்பின்மா ரீச னுயிருண்டான்—செப்பமிகு (௩௦௧)

மிஞ்சியா னற்கருணை யீசன்மிகு வள்ளியா
னஞ்சி லவரைக்கா யாற்றலான்—விஞ்சுமிகைக் (௩௦௨)

கஞ்சாங்கோ ரைவர்தமைக் காய்பகையை வேரறுத்தான்
மஞ்சாருந் தில்லை வளாகமால்—விஞ்சார்வ (௩௦௩)

மல்குற்ற நற்றேர் மறுகில் வரக்கண்டாங்
கல்குற் றிருத்தே ரனைமார்பாற்—புல்குற்றுங் (௩0௪)

குய்வழியே யன்று ருவங்கிறைஞ்சத் தானுமங்ஙன்
றெய்வ வுருவந் தெரிசித்துச்—செய்யிரதத் (௩0௫)

தாலொன்றுட் காரா வமுதென்ன வாய்ச்சுவைக்க
வோரன்ன மன்று ருவகையளா—யார்தரயான் (௩0௬)

மற்றேதும் வேண்டேனம் மாவமிழ்தந் தாவென்னச்
சிற்றே ரிடையாள் சிறுநகைசெய்—துற்றேதக் (௩0௭)

கேட்டிலையோ முன்னங் கிளரு மயோத்திநகர்
வாட்டடங்கை மன்னன் மகிழ்ந்துகலைக்—கோட்டனொடு ()

புத்திரகா மேட்டி புரியமனைக் கோசலைமா
னத்தகைய வுந்தி யலையிற்போங்—தெத்திசையுங் (௩0௯)

தன்னைக் கருதார் தமக்கயலா யுன்னுவா
ருன்னச் சுவையுளத்தி லூறியே—பன்னுதற்கு (௩௧0)

நாவிற் கினிதாகி நாவலர்க டாம்பாடும்
பாவிற் கினிதாய்ப் பயிலமிழ்த—மேவியே (௩௧௧)

யொல்லா வவுண ருளமயங்கச் செய்வதுகா
ணல்லார் மயக்க மறுப்பதுகாண்—மல்கார்வ (௩௧௨)

மோகினி மாதின் முனம்வருவ தொள்ளெழின்மெய்த்
தோகை திருவோடு தோன்றுவது—மோகமுற்றுக் (௩௧௩)

கள்ளவிட நாகங் கருதமேல் வைகுவது
புள்ளரசு கொள்ளப் புறப்படுவ—தெள்ளுமியற் (௩கச)
றேமுறு வேடன் றொடர்ந்துவாய்க் கொள்ளுமுன
மாமுனி யாக்கி மகிழ்வதுகாண்—காமருசீர் (௩கரு)
மங்கை யுயர்கற்பின் வைதேகி தன்னுபயக்
கொங்கைக் குடத்திருந்து கொந்தளிப்ப—தங்கண்மிகு ()
மன்பிற் சவரி யருங்கனிக ளூட்டுதலா
லின்பச் சுவையதிக மெய்வதுகாண்—முன்பிதுகாட் ()
டரோம் வருட மியைந்து புறஞ்சென்ற
வாரோர் முலைக்கன்றி வாய்க்குமோ—நேரோநீ (௩கஅ)
பார்த்து மகிழ்தியெனப் பைந்தொடியாண் மேகலைதொட்
டார்த்து விழிநீ ரிறைத்திடுமுன்—சீர்த்திநற்றே (௩கசு)
ரப்பா லகல வகங்கவேள் வெள்கியுளம்
வெப்பா லகல வெதுப்பொழித்துக்—கைப்பா (௩உ0)
விதஞ்சொல்லி நற்றூய ரோந்தியே பல்லற்
புதஞ்சொல்லி மாடம் புகுந்தார்—பெதும்பை (௩உக)

## பெதும்பை

யெனுமொருபெண் மாரற் கிளவரசே யாகப்
புனைவதனுக் கொத்த புகழா—டினமு (௩உஉ)
மருமந்த மானவே ளாய்கல்வி கற்க
வருமந்த மான மடமான்—கருமைக் (௩உ௩)

கடன்முகட்டி ஞாலக் கதிர்வந் துதித்தான்
மடல்விரியுஞ் செந்தா மரைப்போ—திடமழையின் ()

கூட்டமதைக் காணவுளங் கொண்டமயி றேமாவின்
கோட்டிவர்ந்து கூவக் குறித்தகுயில்—வேட்டெழுந்த ()

வும்ப ரசுர ருணப்பார்க்குந் தெள்ளமுது
பம்பு புளிஞர்சுற்றிப் பார்க்குந்தே—னம்புவியிற் (௯௨௫)

கொற்ற மதியக் குடையான் சுருதிவகை
கற்றுரைப்ப நாளுங் கருதுகிள்ளை—செற்றஞ்செய் ()

காமநெருப் பாலழியுங் காமுகப்பைங் கூழ்வளரச்
சூன்முதிர்ந்து பெய்யவந்து சூழ்மேகஞ்—சேய்மைப் ()

பனிமதியைக் காணாத பைங்கழுநீ ரந்தத்
தனிமதியைக் காணச் சகோர—நனியருள்செவ் (௯௨௯)

வண்ணமலாத தாடகனபு வாயக்தந்திரு மங்கைமன்னன்
கண்ணும்வினை யொத்த கருங்குழலா—ணண்ணி (௯௯௦)

யரம்பும் படிறு மமையாத சூதும்
விரும்பிவந்து பார்க்கும் விழியாள்—வரம்பி (௯௯௧)

லிளையாரை வாட்டுவதற் கேய்ந்தகடுங் காம
முளைவாய்ந்த வென்னு முலையா—ளுளையவரன் (௯௯௨)

ஞாட்பட்ட காமனது நன்னூல் விருத்தியுரை
கேட்புற்றுங் கேளாதார் போன்றிருப்பாள்—வாய்ப்பி ()

ஞறுமலரும் பொன்னணியு நாடி யணியச்
சிறிது விரும்புஞ் செயலாள்—பெறுகற்பின் (௩௩௪)

மாதர் தழுவு மடநாண் பயிர்ப்பினைய
மீது சிறிதியங்கு மெய்யினு—ளோதயலார் (௩௩௫)

பெண்களுடன் போதப் பிடிபோன் மடவனம்போன்
மண்களிக்க வின்றோர் மனங்களிக்க—விண்களிக்க (௩௩௬)

வெய்திநிய மப்புறத்தி னேறுங் கடலனபூம்
பொய்கை புகுந்து புனலாடித்—துய்ய (௩௩௭)

வழகார் துகிலையுடுத் தாய்மலர்கள் சூடிப்
புழுகார் பரிமளங்கள் பூசி—யொழுகொளியின் (௩௩௮)

பத்திசெயும் பல்பூண் பரித்தெழின்மெய்ச் சோதிவிடச்
சித்திர நல்வே திகையேறி—யொத்தொளிர (௩௩௯)

வுற்ற மணிக்கழங்கங் கோரேழ் புரிந்தெடுத்துச்
சுற்றி யிருளையர்க டொக்கிருப்ப—நற்றிறத்தி (௩௪௦)

னென்றென் றெடுத்திருவ ரோங்கு மனுவிரண்டாய்
நின்றவெழுத் தோருருவா னேர்பாடிப்—பின்னை (௩௪௧)

யிரண்டென்று மேனு ளிருபதத்தாற் றிண்கல்
பரிந்த மங்கை யானபுகழ் பாடித்—தெருண்டப்பான் ()

மூன்றென்று மூன்றிடத்து மூவர்வடி வாய்ப்பதங்கண்
மூன்று மளிக்கு முறைபாடி—யான்றவன்பி (௩௪௩)

ஞான்கென் றெடுத்துமுத ஞல்வர் மணச்சிறப்பின்
வான்குலவு மேற்ற மகிழ்ந்தோதி—யாங்கடுத்த (௩௪௪)

வைந்தென்று தாய்மொழியா லாரணியப் பஞ்சவடி
வந்தவ ணுற்ற வகைபாடி—முந்துமஞ்பி (௩௪௫)

ஞறென்றெங் கோமாட்டி தன்னை யரக்கன்வெளவ
வாறெங்கு நாடு மதுபாடிப்—பேறொன்ற (௩௪௬)

வேழென் றெடுத்தண்டத் தேழா யினநடுங்க
வேழுமரந் தீர்த்த விசைபாடி—யேழுலகோர் (௩௪௭)

காணுத லாய கருணை யியல்பாடி
வாணுத லாடி மகிழுங்கா—ணிலத்தி (௩௪அ)

ஞடுசிறப்பு நணுகுமொரு தில்லை நகர்
கூடுதிருச் சித்திர கூடத்தா—னீடுநறும் (௩௪௯)

பூவிரியுஞ்சோலை புடையோங் கிரு கோட்டுக்
காவிரியிற் றென்பாலோர் கங்கையென—மேவருநீர்ப் ()

புற்றரவு தந்தமணி போந்தபுல வற்குதவக்
கற்றவிண்ணன் கண்ட கடுவரல்யாற்—றுற்றுயர்ந்து ()

பொங்குபுன லெஞ்ஞான்றும் போந்து குடக்கொழுகு
மங்கண்வட பாற்கோளை யாற்றிஞன்—றங்குசெம்பொ ()

ஞட்டினர் நாட்டின்ஞ நாடாமே நன்ஞடா
நாட்டிஞ னற்சோழ நாட்டிஞ—ஞட்டுபுக (௩௫௧)

றம்புவியோர் போற்று மகன்சோணாட் டோங்கிவள
ரும்பள நாடனவ் வோர்நாட்டிட்—பைம்பொழில்சூழ் ()

சாருவ நம்பி சதுர்வேதி மங்கலத்தி
ஞரு மவாசி நயந்தோங்கி—நீருயர்ந்த (கூருரு)

வெல்லையிலா மாந்த ரினைந்தாங் கறம்பலசெய்
தில்லை வளாகச் செழும்பதியா—னெல்லையிலா (கூருசா)

மாலையா னீக்கவருண் மாலையான் சேரலன்சொன்
மாலையான் றன்னுளவ மாலையான்—கோலங் (கூருஎ)

கரியானெங் கெங்குங் கரியான் றிருந
கரியான் மருமால் கரியான்—பிரிவார்ப் (கூருஅ)

பரியான் சவரி பரிந்து புரிச
பரியான் குரக்குப் பரியான்—பெருகியே (கூருகூ)

யென்றுங் கடல்வேலை யின்னொலிபோ லோவாது
முன்றில் கறங்கு முரசினு—னென்றுமறந் (கூசாO)

தோன்றிய வாலிக்குச் சுக்கிரிவ னென்னும்பே
ரான்றவனும் வாய்புதைக்கு மாலியா—னூன்றுநெறி ()

செற்ற விலங்கைச் செறுநர்ச் செறுத்துயர்த்த
கொற்ற வ..மக் கொடியினுன்—றற்றவரஞ் (கூசாஉ)

சூலிபாற் கொண்டான்செய் சூழ்வறுப்ப வேலையிலை
கோலினுன் கோடாச்செங் கோலினுன்—மாலைமணிக் ()

கச்சு வதியுங் கமலை கனதனத்தி
னச்சு வதியு மகன்மார்பன்—மெச்சித் (௩௬௪)

தரணி புகழத் தருவரைக்கொன் றூன்றோர்
பரணிநனி பாடப் பயின்றோன்—றிரணுநெடுங் (௩௬௫)

கார்த்திகைப்பிக் கும்மேனிக் கண்ண னுரோகணிசே
யார்த்த ம்ருகசீ ரிடமறுத்தான்—சீர்த்தித் (௩௬௬)

திருவா திரைக்கடலிற் சென்றுறங்கு வோமென்
றொருவாதாங் குற்ற வொருவன்—மருவுபுணர் (௩௬௭)

பூசத் திருநாளிற் போதந்தான் பூஞ்சந்தம்
பூசத் திருமல்கு பூண்மார்ப—னேசஞ்செ (௩௬௮)

யாயிலியத் தந்தையிலி யாருமிலி யாவுமுளன்
மேய பரிமகஞ்செய் மேதக்கோன்—றாயநறுங் (௩௬௯)

கற்பூர நாறும்பைங் கார்மேனிக் கொண்டன்மிகு
பொற்பூர நின்ற புகழ்வைப்பு—விற்பூட்டி (௩௭0)

யத்திரங்கள் வீசி யமர்க்களத்தி லனறரக்க
னுத்தரமொன் றோதா தொறுத்திட்டான்—மெத்துசிலை()

சேரத்த நம்பிவீ சித்திரையார் பாற்கடலி
னாரத் துயிலு மருட்சோதி—வேரித்தண் (௩௭௨)

---

(௩௬௪) இது முதல் உஎ-நக்ஷத்திரங்களின் பெயர்கள் ஒலித்தலைக் குறிப்பினாலுணர்க.

பூத்தவிசா கப்பொருந்து பூவை புணர்கேள்வன்
வாய்த்த விசாகனுக்கோர் மாதுலனீர்—கோத்தநில (௩௭௩)

மேத்து மனுடவடி வேந்தினன் கேட்டையுறக்
கோத்த நிருதர்களைக் கொன்றழித்தான்—மாத்தடத்தின்

மூலமே யென்றழைக்குமா முன்வந்தா னெவ்வுயிர்க்கு
மூலமே யான முதற்கடவுண்—ஞாலுநற்பொற் (௩௭௫)

பூரா டகத்தானை போர்த்தலைசத்தான் றாணிடைவந்
தோரா டகத்தா னுயிர்கவர்ந்தா—னீராடி (௩௭௬)

யாண்டிருத்தி ராடவந்தி ராயிழையி னொன்றவர்த
மாண்ட கலைகவர்ந்த மாட்சியான்—வேண்டிப் (௩௭௭)

பொருவே ணயவாப் புலத்தா ருளத்தான்
திருவோண நாளுடைய செம்ம—லொருவாது (௩௭௮)

நேரவிட்ட மாயெதிர்ந்த நீள்பரசு ராமனஞ்சிப்
பேரவிட்ட கோலான் பெருமறையோர்—சீர்சா (௩௭௯)

விதையங் குளிர விடுமாசி யோடட்
சதையங்கை யேந்துஞ் சதுரன்—பதையார் (௩௮௦)

விருப்பூரட் டாதியிலவ் வீடணனுக் கீந்தான்
சுருப்புத் திரட்டாதிற் றேய்தா—ருரத்தான் (௩௮௧)

செயிரோ வதிசயந்தன் றீமைசெயப் பைம்பூம்
பயிரோ வுதவு பரம—னியல்செறிதேர் (௩௮௨)

மாமறுகிற் போத மணிக்கழங்கை விட்டெழுந்து
காமரு தாயர் கணஞ்சூழத்—தேமருவு (௩௮௩)

சேவடியைச் சென்றெதிரே சேவித் தனள்காயாம்
பூவடிவி னோக்கம் பொருத்தினாண்—மூவர் (௩௮௪)

வடிவன் கரத்தில் வயங்குவதென் னென்ன
முடிவி லரக்கர் முடியக்—கடியும் (௩௮௫)

பொருளென்றாட் கன்னாய் புகுந்தெனக்கு வாங்கி
யருளென்னத் தாய்நகைசெய் தம்ம—தெருளாகிலாய் ( )

வில்லம் பிவையிறைவன் மேனா ளிகந்துவிடி
ணல்லம் புவிநிலையி னாடுமோ—தொல்லைநெறி (௩௮௭)

வேத மொருநான்கும் வேதா கமப்பொருளும்
பூதலத்தி லென்றும் பொருந்துமோ—மாதரசென் (௩௮௮)

றோதுழித் தாதி யொருபூந் தொடையலொடு
போதர வாங்கிப் புனிதனுக்கே—யாதரவாய் (௩௮௯)

மாலை யிடுவனென மற்றன்னை நம்மகட்குக்
காலைவரு மோகங் கலந்ததென—ஞாலமெலாந் (௩௯௦)

தந்த வொருத்தியிடுந் தண்பூந் தொடையலன்றி
யிந்த மலர்மாலை யேற்குமோ—சந்தக் (௩௯௧)

கொடியே மரகதமே கோமளமே யென்ன
வடிவே னெடுங்கண்ணாண் மையல்—படையாப் (௩௯௨)

பெருமான்பிற் சென்றமனம் பேராவா றுங்குப்
பொருமாகன் மாடம் புகுந்தா—ளொருமாரன் (௩௯௩)

சங்கைகொடு நாளையமர் சாலுமென்றெங் கோன்றேர்ப்பி
னங்கயல் வீதி யடைந்திடவோர்—மங்கைமல (௩௯௪)

மங்கை

ரந்தணனூர் பன்னூ ளரிதிற்கை தேர்ந்தினிதாச்
சிந்தனையிற் செய்தமைத்த சித்திரப்பெண்—சந்ததமும் ()

வாழி மதனன் மருவிரதிப் பெண்டனக்கோர்
தோழி யெனவமையுந் தோற்றத்தாள்—சூழுலகி (௩௯௬)

லேனூதி காவிதிமற் றெட்டிப்பூப் பட்ட மதன்
றூணுக வந்தளிக்குந் தன்மையா—டேனூர்ந்தோர் (௩௯௭)

கண்டான் மயக்கங் கழிக்கு மயிலன்றிக்
கண்டான் மயக்குங் கவின்மஞ்ஞை—விண்டோய்வோ ()

ருண்டமிச்சில் வேலை யுதவமிழ்திற் கோரிகழ்ச்சி
கண்டு விமிழ்தின் கருணைரச—மண்டிரனிக் (௩௯௯)

கோடிப் புகலிடம்போ லொன்றுமிலாத் தூங்கிருண்மூய்க்
கூடிக் குலவுங் குழலினூள்—பீடழிந்த (௪00)

மாய நடலை மயக்க முயக்குமிகை
நேயம் பொருமை நெடுஞ்சூது—தூயதலா (௪0௧)

வஞ்சங் துயர்வு மருட்கை கொடுமையடு
நஞ்சங் ததும்பு நயனத்தாள்—விஞ்சுங் (௪0௨)

குழலு நரம்புங் குயிலு மயங்க
மொழியு மினிய மொழியா—ளெழின்மறுகி (௪0௩)

னன்பவனி யைப்பார்க்க வேந்தி நணுகெலுமிச்
சம்பழ மன்ன தனத்திருள்—வெம்பமரிற் (௪0௪)

பீடுதெரி யாவரக்கன் பெற்றியைப்போற் கொங்கைவலி
யீடு தெரியா விடையிருள்—பாடயலிற் (௪0௫)

றன்னொத்த மங்கையொடு தானொ ருபவனத்தின்
மின்னொத்த மாதர்பலர் மேவிவரத்—துன்னி (௪0௬)

யிருகூறு வன்றானை யேவியே தானு
மொருகூற்றி லேதலைமை யுற்றுப்—பெருகியமென் (௪0௭)

பூளை கிடையிணைய போதத் திரட்டியே
நீளுருமயிர் பீலி நிறைசுற்றி—வாளொளிசெய் (௪0௮)

நூலுங் கயிறமுத னுண்வினையாற் கட்டியராத்
தோலுமயிற் பீலிச் சுடர்க்கண்ணு—மாலுநெடு (௪0௯)

நீரினுரை யும்போன்மென் னீர்மையவாய்த் தென்றல்படி
னேரினெழுந் தாடு நெறியவா—யேரியலும் (௪௧0)

பல்வண்ண மாகியமென் பந்துகடா மோரேழ்கொண்
டொல்வன வாட வுருற்றுதலும்—வெல்வகையா (௪௧௧)

லேதிலாள் பாங்கோ ரொழிலுருவி யப்பரப்பின்
மீதிருள் கோல்லை விளக்கமுற—மோதிமிசை (௪௧௨)

யொன்றேற்றி வீழாம லொன்றின்பி னொன்றாக
நின்றேற்றிக் கைம்மலர்க ணோர்தட்டித்—துன்றா (௪௧௩)

வருவன நேரே மறித்துநின்று கட்டிப்
பொருபவண்முக் நாற்றின்மேற் போக்க—வருகிருந்த ()

தன்றோழி சென்றெதிரே தானவற்றைக் கைவாங்கி
நின்றிரிவை யெண்ணீர் நீரென்னச்—சென்றே (௪௧௫)

யடித்துவிசும் பேற்றி யனைத்தினையுஞ் சேரப்
பிடித்துக் கரத்தடக்கிப் பெட்பின்—விடுத்தவைகள் (௪௧௬)

கோதையிசை போதக் குவிவிரற்குட் காட்டியபின்
மோதி முலைமேன் முதுகின்மே—லோதியின்மே (௪௧௭)

லொற்றி யெழுப்பி யுபய கரத்தூடு
மெற்றுபதத் தூடு மெறிந்தேற்று—முற்றுகடுங் (௪௧௮)

காற்றென்ன வோடுங் கறங்கென்னச் சென்றோனாஞ்
ஞாற்றின் கணக்கா றனித்துரைப்ப—வேற்றயலோர் ()

மங்கை யெழுந்தெறிகோல் வாங்கி யவணெய்தி
யங்கை யிடையேற் றவைபோக்கிச்—சங்கந் (௪௨௦)

திருத்தி நடசதியிற் செவ்வனந்தப் பாமற்
பொருத்தியோர் நாற்றிசையும் போகி—விருப்பிற் (௪௨௧)

பறப்பனள்போ லாயொருபாற் பக்தொருபாற் போகத்
திறத்தினிற்பின் னேகுசெயல் காண்பார்—மறித்துத்தாங்()

காளையிளைய கடும்பாரம் வண்டி நெறி
நீளவுமா றுத னினைந்தயலே—யாளவிட்ட (௪௨௩)

சேமவச்சுப் போலிந்தச் சிற்றிடையிற் றற்காப்பக்
காமரிடை மற்றிலெனக் கண்கலங்கி—நாமுறவு (௪௨௪)

மெய்துபந்து கைப்புறத்தா லெற்றி யுடைதிருத்தி
மொய்குழலு நொய்தின் முடித்துமீண்-டைதெனப்போய்க்

காலாற் கரத்தான்மெய்க் காற்றான் மறித்தெழுப்பி
மேலா யிரமேற்ற மெல்லிடையங்—நாலானள் (௪௨௬)

வந்தா யிடைநின்று மாமே கலைவீக்கிப்
பந்தா டியல்கள் பலபேசி—முந்தாடு (௪௨௭)

மாடலை யெல்லா மறநகைத்து மூவேழ்பந்
தீடின்மென் கோல்கொண் டெறிந்தேற்றுப்-பாடமையாச்

சூழு வளியிற் சுழலு மிலையேபோற்
பாறு யதுகறங்கு பான்மைபோற்—காறுவி (௪௨௯)

யோடா நடவா வொசியா விடையொல்காப்
பாடா விடையே பலபேசா—நாடாநற் (௪௩௦)

பூவொலியும் பந்தின் புடைப்பொலியுங் கேட்பினன்றி
யாணர் மிகுமெய் யியக்கத்தைக்—காணலராய் (௪௩௧)

மண்ணினளோ விண்ணினளோ மாயமோ வென்றும்ப
ரெண்ணவெழு பந்தோ டெழுந்தேகித்—துண்ணெனவே()

பின்பற்றி வீசிப் பெயர்த்துக் கலைதிருத்தி
மின்பற்று பூண்கள் விளக்கியே—தன்பக்கல் (சஙங)

வந்தவற்றை யெண்ணி மறித்துக்கண் சும்புளித்துச்
சிந்தையினுஞ் செல்லுந் திறத்தடித்து—வந்தயலே (சஙச)

தோழியொடு பேசித் தொடைய றிருத்திவிட்டு
வாழிபல சாரி வகைவந்தே—யாழியைப்போ (சஙரு)

னூற்றிசையுந் தானாக நாலைஞ்ஞூற் றோரிரட்டி
மேற்றொகையெண் ணிட்டு விளங்குமுயிர்ப்—பாற்றவயற்

பாங்கினின் றுடலினற் பண்புசொலத் தூயோனைத்
தாங்குமணைக் காணலுஞ் சாலுமோ—பூங்குயிலே (சஙஎ)

யாற்றுவாய் வேர்வை யகற்றுகேன் போதுமெனப்
போற்றுவா ளாகிப் புகலுங்கா—லாற்றற் (சஙஅ)

கதழ்பரியின் வேள்விக் கலப்பையா னென்னூர்
சிதைவி னுகத்தடிவான் சேர்ந்தார்க்—கிதமாக (சஙகூ)

வேட்டாங் களிப்போன் வியன்பரம்பண் பாகியபொற்
பூட்டாங் கயிறிகழ்கோ லொண்கரத்தான்—காட்டி (சச0)

விருப்புக் கொழுவு தசை யின்பினுகரும்
விருப்ப விராதனைமுன் வென்றோன்—செருத்திறலைப் ()

---

(சஙகூ) இது முதல் சில உழவுத்தொழிற்குரியவற்றின் பெயர்கள் ஒலித்தலைக் குறிப்பினாலுணர்க.

பற்றிய வெண்குப் படைச்சால் பிணையுடையா
னுற்றபன்றி யாகநிலத் தூடுழுதான்—மற்றொருகாற் ()

கண்டஞ்ச யாருமொரு கன்றாக வந்தானைக்
கொண்டங்கு வீசவிளாக் கோலினான்—மண்டுபொறை ()

சார்ந்த விதையன் றனிமுளைவெண் டிங்கணுதல்
சேர்ந்த வெழின்மார்பன் செங்கனகப்—பூந்துகிறோ ()

னாற்றினா னோர்குரங்கை நட்டான் களையெடுத்தா
னாற்ற லசுரர்தமை யன்றடக்கி—யாற்றற் (௪௬௫)

கதிரஞ் சிலையுடையான் கள்ளா றறுத்தான்
பொதியகட்டி னானிப் புலியை—மதயானைக் (௪௬௬)

கோட்டை யெடுத்தான் குவித்தான் களத்தினிடை
வீட்டிக் கரனாதி வெய்யோரை—நீட்டியகூர் (௪௬௭)

வைக்கோலான் மாபோரின் மல்கு கதிர்மறைத்தான்
மைக்கார்சூழ் தில்லை வளாகமான்—மிக்கோங்கு (௪௬௮)

தேரி னரவந் தெருவிற் றலைப்படலும்
வாரின் விசித்த வனமுலையோர்—காரிகையா (௪௬௯)

ளோடிவந்து கூறக்கேட் டொண்டொடியுந் தோழியுட
னாடிவந்து கும்பிட்டா னாயகனைப்—பாடிவந்து (௪௫0)

தென்றலில் வந்த செயவீர வேடனது
மன்றலங்கோல் வீசி வளைத்தொறுப்பக்—கன்றிமன ()

மெய்சோர்ந்து கண்சுழன்று விம்மி முலைகறிய
நெய்சோர்ந்த கோதை நிலஞ்சோரக்—கைசோர்ந்து(சருஉ)
கண்டறியாக் காமக் கடுப்பின் வலிமைநென்னற்
கொண்டறியா ளின்று குதிகுதித்து—மண்டெரியிற் ()
பூவுற்ற தென்னப் புனைமெய் கருகியங்தோ
பூவுற்றாள் பூவுற்றாள் போன்றுற்றார்—மேவுற்றுத்(சருச)
தூக்கி யெடுத்துச் சுடர்மாடம் புக்கலர்ப்பூஞ்
சேக்கை தனிற்கிடத்தித் தென்றல்வர—மீக்கிளர்ந்த ()
வாதா யனந்திறந்து வாசமலர் நீர்தெளித்துத்
தீதார் விடாயைச் சிறிதொழிப்ப—மாதார்ந்த (சருசு)
வாழிவரம் பிட்ட வபிரா மனையெண்ணி
யூழிவந்த தோவென் றுரைத்தெழாத்—தோழி (சருஎ)
மறுகின் மறுக வருத்தானுக் கென்னுன்
குறுகி யிழைத்தபிழை கூறு—யிறுகத் (சருஅ)
தழுவத் தணியுமேற் சார்ந்துகொணர்ந் துய்த்தென்
கழுமுற்ற நல்லுயிரைக் காப்பாய்—கெழுமு (சருசு)
சிலைவளைத்து முன்னவளைச் சேர்த்ததுபோ லென்பொன்
முலைவளைத்துச் சேர மொழியாய்—மலைமுலையா (சகO)
யென்றுரைப்பப் பாங்கி யிவனையுன்ற னல்லுளத்தி
னன்றுகொண்டால் யாரு நகையாரோ—வொன்றுரைப்பன்

வல்லையயன் கோயின் மனையைமிதித் தாலனைத்து
மெல்லைப் பிடாரிகளா வெய்துமென் று—சொல்லுதல்போ

லொல்லா விவன்கூட்டத் துள்ள விவன்முதலா
வெல்லாரும் பொல்லா வியல்பினரிப்—பொல்லான் ()

றனைக்கண்ணே தாய்க்கொலை சால்புடைத்தென் றெல்லா
வுரைப்பவர்க்குச் சான்றாகி யுற்றா—னிருக்குமிட (௪௯௪)

மீந்தான் றலைக்கே யிடாிழைத்தா னீங்கிவனைச் [காற்
சேர்ந்தார்கட் கெவ்வளவு தீங்குசெய்யான்—பேர்ந்தோர்

கட்டுண் டடியுண்டு கள்வ னெனவேசத்
தெட்டுண்டு வெண்ணெய் திருடியுண்டு—மட்டின் (௪௯௯)

முறைகேடா மாதர் முயக்க முயங்கிப்
பெறுபோதெல் லாம்பொய்யே பேசு—மறையுங்காற் ()

றாவில் விலங்காய்ச் சலசரமா யுற்றனன்முன்
றீவினையோ நல்வினையோ தேர்ந்துபா—ராவலொடு (௪௯௮)

பண்டிவன் கொண்டவொரு பத்தினியைத் தீயில்விழ
விண்டுதள்ளி விட்ட விதமறியாய்—கொண்டவந்த (௪௯௧)

நின்மாற்றா ளாலன்றோ நீடிலங்கை பீடழிந்த
தம்மாற்றங் கேட்டிலையோ வன்றியுமோர்—வெம்மாய ()

மைத்துனன்றன் முன்னோன் மனையாள் கருப்பத்தோ
டொத்துறவெங் காட்டினில்விட் டோட்டினு—னத்தகைய

மாகொடிய மாமியுண்டவ் வெய்யாண் மருகியைமுன்
போகரிய காட்டிற் புகுத்தினா—ளாகொடுமை (சஎஉ)

யிப்பெரிய சம்பந்த மெங்குங் கிடைப்பரிதென்
றப்பெரியாள் சொல்மன மாறினா—ளொப்புக் (சஎ௩)

கடந்தானவ் வீதி கடந்துதிருத் தேர்மேற்
படர்ந்தா னயல்வீதிப் பாலோர்—மடந்தை (சஎச)

## மடந்தை

யிவளோர் மடமா திருங்காம னாறோர்
தவளார விந்தத்துத் தைய—னவையேறு (சஎரு)

வைங்கோன் மலரா னகன்ஞாலத் தாட்சிபெற்ற
செங்கோல்போ னாளுஞ் சிறந்துளாண்—மங்காத (சஎசா)

வண்மை மதனன் மவுலி சுடருமணி
பெண்மையுரு வாகிவந்த பெற்றியாள்—விண்மிசைச்செல்

குன்று மதிமாரன் கோலமுதந் தென்றலிவை
யொன்றாக வந்த வுருவினா—ணன்றேர்கொண் (சஎஅ)

மோகினிப்பெண் ணுக்குமொரு மோகத்தை மூட்டுவிப்ப
தாகி யுதித்த வருங்கலைமான்—மோகனஞ்செய் (சஎகூ)

காமக் களஞ்சியமக் காமக் குருபீடங்
காமப் பெருஞ்செல்வக் கண்ணின்மணி—காமிக்கும் (சஅ0)

காமக் கவசமுயர் காமத் துவசமந்தக்
காமற் கவசமுய்க்குங் காமரசங்—தாமணையான் (சஅக)

றன்னைத் தெறுமதனன் றானும் விழைந்தழிய
வுன்னித் தனைவிடுத்த வோவியப்பெண்—மன்னுற்ற ()

மோகப் பெருஞ்சலதி மோகப் பெருஞான
மோகப் பெருவாழ்வு மோகரச—மோகப்பேர்க் (௪அ௩)

கற்பூர வல்லி கனகவல்லி காமவல்லி
பொற்பூர வல்லி புனிதவல்லி—யற்புதப்பைம் (௪அ௪)

பூமாலை காமன் புனைமாலை போர்தார்க்கு
மாமாலை யூட்டு மணமாலை—காமேவ (௪அ௫)

ஞைந்தேன் வெறுத்தேனு னற்றவத்தே னென்னுநீர்
வந்தேன் மயக்கவெனு மாமலர்த்தேன்—முந்தார்ந்த ()

வானத் தமிழ்த மதியமிழ்த மல்லாத
ஞானத் தமிழ்தந்த நல்லமிழ்தந்—தேனரக்கி (௪அ௭)

னொட்டாக் கடையா வொறுக்காத் துளைப்படுத்தா
மட்டார் சுடருமிழு மாணிக்கந்—கட்டார்சேண் ()

செல்லாப் பகன்மழுங்காத் தீயரவாற் கோளெய்தா
நில்லா தலையா நிறங்குலையாப்—பொல்லாத (௪அ௯)

சாவம் பொருந்தாத் தணந்தா ருயிர்கவரக்
கோவம் பொருந்தாக் குளிர்மதிய—நாவக் (௪௯0)

கடலிற் பிறவாத காமர்முத்தம் பூத்த
மடலிற் பிறவாத வாச—முடல்கருக (௪௯௧)

நெற்றிவிழித் தட்ட நிருபனையிந் நிலத்தின்
மற்றுமுயிர்ப் பிக்கும் வளத்தினாள்—வெற்றிமதன் (௪௯௨)

வேதா கமப்பொருளை மேதினியோர்க் கோதுவிக்கப்
போதா சனம்விட்டுப் போதந்தாண்—மோதாசை (௪௯௩)

யாடவரா மஞ்ஞை யவாக்கொள்ளுங் காரொன்னக்
கூடி நெறித்தமலர்க் கோதையா—டோடலர்தார் (௪௯௪)

மைந்தர் மனமா மனக்காந்தக் கல்லுருக்கு
மிந்துவைகே ராகு மெழின்முகத்தாள்—சிந்திக் (௪௯௫)

களித்து மதர்த்துக் கடுங்கூற்றைப் போர்க்கு
விளித்து விலங்கி மிளிர்தந்—தொளித்துச் (௪௯௬)

சுழன்று மலர்ந்து குவிந்துதோ யானை
யழன்று கழுநீர்போ லாகிக்—கழன்றுவரு (௪௯௭)

நஞ்சந் தயங்கி நவைகுடிலங் குத்திரம்பொய்
வஞ்சங் கொதிக்கு மதர்விழியாள்—விஞ்சு (௪௯௮)

கெளிறுஞ் சுழியுங் கிளர்சை வலமும்
வளர்வள்ளை யுந்நீள் வராலுங்—கிளருங் (௪௯௯)

குமுதமுமுத் தாம்பலுங் கோக னதமு
மமைகுவளை யோடலவன் யாவுஞ்—சமையும் (௫௦௦)

படிகொண்டு காமத்தீப் பற்றினார் தோயுந்
தடமொன் றெனவிளங்குந் தையன்—மடமா (௫௦௧)

னருகி னாசாவி யசாத்தணிக்குந் தோழி
வரிவிழியா ளோடரங்கம் வந்து—தெரியிழாய் (ருOஉ)

தேவ ரிருவர் திருமந் திரத்திரண்டா
மேலெழுத்தே பேராக மேயினராய்—மூவர் (ருOங)

வடிவு மொருவடிவாய் வந்தவராய் வேட
னெடியமரப் பேழை நிகழ்த்த—முடிவிலா (ருOச)

முத்தி யுலக முதலளித்த மூர்த்தியராய்ப்
பத்தி வழுவாப் பயிற்சியினா—லொத்தமய (ருOரு)

தீர்ந்த சரபங்கன் றெய்வச் சுதீக்கணன்மற்
றூர்ந்த புகழ்ச்சவரி யாதியாப்—போந்தவர்கள் (ருOசா)

வீடுபெற வேண்ட விரும்பி யளித்தவரோ
பீடுபெற வைகும் பெருக்கத்தா—னீடலத்தித் (ருOஎ)

தில்லை வளாகம்போற் றிவ்வியதே சம்பிறிதொன்
றில்லை யெனாநன் கிசைத்திடுங்கா—னல்லிசைகொள் ()

கங்காளன் வில்லிறுத்த கண்ணாள னேதவலை
யங்கார்ந்து நண்பற் கருள்செய்தோன்—பொங்கோத ()

வட்டமாத் தால மலரடியா லன்றளந்தான்
சட்டியன்னா மன்விஞ் சருவத்தான்—சிட்டணாத்தொ ()

---

(ருOக) இது முதல் சில, வீட்டிலுள்ள பாத்திரங்களின் பெயர்கள் ஒலித்தலைக் குறிப்பினாலுணர்க.

குத்து விளக்குபவன் கூடை வருக்கருள்வோன்
கொத்துச்ச டாம குடத்தினன்—வைத்தசெழுங் (௫௧௧)

தாம்பாளக் கன்றவிழ்த்துத் தான்மேய்க்குந் தன்மையினன்
கூம்பா மலர்கஞ்சக் கொப்பூழான்—றேம்பாக் (௫௧௨)

குவளைவிழி மார்பன் கொடும்போர்ப்பா ணையான்
றவலையன்பர்க் கியான் றலைமே—னுவல்செ (௫௧௩)

யகப்பை யரவத் தறிதுயில்கொ ணம்பி
யுகப்புறவா ளையேற்கன் புய்த்தா—னிகப்பில்கருப் (௫௧௪)

பானையான் றாழிவெண்ணெய் பார்த்துண்ட திப்பியன்முன்
வானையளந் தோன்புல் வயங்கேவா—லேனைக் (௫௧௫)

கரண்டகத்தின் செய்கைதனைக் காய்பாக்கு விட்டிட்
டிரங்குழியோர் கண்கொடுத்த வெந்தை—பரிந்தே (௫௧௬)

யரிமா மணைமே லரசிருந்த சோதி
துருவலகை வன்முலைப்பா லுய்த்தான்—பெருகுபுல ()

மஞ்சட்டு வத்துவொன்றென் றுய்ந்து தவத்திருந்தார்
நெஞ்சத்துச் சேக்குந்தா னித்தியன்மால்—விஞ்சுற்றூர் ()

போரை முடித்தான் புனைமணித்தேர் வீதிவர
வாரை யணிந்தமுலை வந்தனையா—வீரைவண்ண (௫௧௯)

னங்கைச் சிலையு மவிர்முகமுங் கண்டுவந்து
செங்கை குவித்தெதிரே சேவித்தா—ளங்கமிசை (௫௨௦)

மெல்லமெல்ல வேறும் விடமு நெடுங்காம
மொல்லெனச்சென் றூர்ந்த துடம்பெல்லாம்-வில்லுமிழ்ந்த

வம்புபட்ட மானேபோ லாவி துடிதுடித்தக்
கொம்புபட்ட பாடு குறிக்கவோ—நம்பி (௫௨௨)

மதனைக் கடைக்கணித்து மான்றேர்கொண் டேகப்
பொதியெனப்பூ வேந்திமதன் போந்து—கொதியாப் ()

படுபாவி யன்னான் பழியஞ்சான் வாரி
விடுபாணத் தாற்றாள் விழுந்தாள்—கடுவிழியார் (௫௨௪)

தாங்கி மனைபுகுந்து தண்பூ வமளியிட்டுப்
பாங்குப சாந்தி பலபுரிய—வேங்கியுளஞ் (௫௨௫)

சோர்வெய்தித் துஞ்சுந் துயினீத் தறிவழிந்து
வேர்வுற நீயிர் விலகிரோ—நீர்மினினி (௫௨௬)

வாழலும் வாழேன் மதியிலேன் மற்றொன்று
சூழலுஞ் சூழேன் றுயருற்றே—னூழி (௫௨௭)

நெருப்பைப் புழுகென்று நேராத நஞ்சைப்
பொருப்புறையுஞ் சாந்தமென்றும் பூசி—வருத்துவீர் ()

பாரிற் றறுகண் படைத்தீர் கிடக்கநெடுந்
தேரிற் றெருவிற் றிரிதருவீர்—காரியமென் (௫௨௯)

கண்டாலை வாட்டுங் கருத்தோ வறுவேலென்
கண்டாலை வாட்டக் கருதீரோ—மண்டோத (௫௩0)

வையம் புகழ வருவீர்நும் மைந்தன்விடு
வையம் புகத்தடிதல் வாய்க்காதோ—மெய்வற் (௫௱௧)

கலையுடையீ ரெண்ணெண் கலையுடையீ ரம்பொற்
கலையுடைபோய் நான்கிடத்தல் காணீ—ரிலகுதடங் ()

கைச்சங்கு கொண்டீர் கதிர்வெண் குடையீரென்
கைச்சங்குங் கொள்ளக் கருதியதே—னச்சஞ்செய் ()

கையாழி யொன்றுடையீர் காமக் கடுப்பொழித்தென்
கையாழி யொன்றும்வகை காண்கிலீர்—மெய்யே (௫௱௪)

சிலைவளைத்தீ ரென்பாரென் செய்யகொங்கை யம்பொற்
சிலைவளைத்துச் சேர்த்தணைத்தல் செய்யீர்—தலைவரே ()

யிப்படி யென்னை யிழிதகவு செய்துவிட்டிட்
டெப்படிநீர் போகுவதற் கெண்ணினீர்—தப்புளவிக் ()

காலத் தியல்பாற் கடிமாதர்க் கல்லாமன்
ஞாலத்தென் போல்வார்பா ளுட்டமில்லீர்—மேலை (௫௱௭)

யிவனீச னென்னேன்மற் றெஞ்சுமென்று வையேன்
கவலையுங்கொள் ளேனடியேன் கண்டு—நுவலுநல்ல ()

சாதியி லாதவற்குச் சந்ததியா னென்றுசொல்லே
னோதமதிக் குற்றமிக்கா னென்றுரையேன்—மாதருக்கா ()

மாடு பிடிக்குமொரு மாயத் திருடனென்னேன்
வேடுவன்பா னட்புடைய வெய்யனென்னே—னூடுவதற் ()

கேதுவுண்டோ வென்பா னிறைவரோ யிவ்வழிநா
ளேதுவனேற் பின்ன ருவப்பீரோ—போதும் (ருசக)

பரிவீ ரெனப்புலம்பிப் பாங்கியர்நின் ருற்ற
வுரிய வறிவுசிறி துற்ரு—ளரிவைபல (ருசஉ)

## அரிவை

வெல்லா ரினுமதனுக் கேய்ந்தநூல் கற்பிக்க
வல்லா ளொருத்தியிவண் மானனையாள்—சல்லாப (ருசங)

மைந்தர்கடம் பேராசை மையலெல்லா மோருருவாய்
வந்து விளங்கு வடிவினு—ளுந்தியெழு (ருசச)

காமக் கடலிற் கரணத்தீ வோடிவரு
சேமக் கலமனைய செவ்வியாள்—காமிக்கு (ருசரு)

மாடவர்க ணெஞ்ச மடிகளெனப் போற்றிசெயப்
பாடகக்காற் பொற்சிலம்பு பாண்மிழற்ற—நாடி (ருசசா)

யடியெடுக்கும் போதெல்லா மஞ்சியடுங் கூற்ற
முடியெடுக்கா நோக்கா முகிழ்ப்பப்—படிமுன்ன (ருசஎ)

மென்னதவஞ் செய்ததோ வேந்திழையிம் மாதரசின்
பொன்னனைய பாதம் பொருந்தவே—முன்னமிந்தப் ()

பைந்தொடியைக் காணநங்கண் பாக்கியமென் செய்தவென
மைந்தரள வில்லா மகிழ்வெய்தச்—சந்த (ருசகூ)

வழகுக் கழகுசெய்தாங் காய்மெய் புனைந்து
பழகு மணிமண்ட பத்திற்—கெழுமணையில் (ருரு0)

வாழி மடக்கொடியாள் வைகுதலும் பூமாது
தோழி யெனுந்தகைய தோழிதொழா—வாழியன்னை ()

யிந்த வழகுக் கிணையவ் விராமனன்றிச்
சுந்தரமே வேறு சொலப்போமோ—சந்தமு (ருருஉ)

மன்னு னுடன்கலந்தா லானபய னமெனவு
மின்னே யெனையவர்தா மேவுவண்ண—மென்னிழைத்தே()

னென்றுட்கு நீமுன் னிழைத்ததவத் திப்பதியா
நன்றுய சாலோக நண்ணினுய்—பின்றுதவ் (ருருச)

வண்ணல்சா மீப மடைந்தாயச் சாரூப
நண்ணியது நானே நவில்வன்மணி—வண்ணனது (ருருரு)

மாகூர்மத் தின்வடிவே வாய்ந்தபுறந் தாளென்னப்
பாகூர்மென் சொல்லாய் பயின்றிட்டா—யாகாயத் (ருருசா)

தோங்கு வடிவோ னுயர்ந்தகவு மோதகியே
வீங்கு துடையாக மேவினுய்—தாங்குசெங்கை (ருருஎ)

யாழியுஞ் சேக்கை யரவின் கணபணமும்
வாழியல்கு லாக வயங்கினுய்—தோழியவ (ருருஅ)

னூன்று ளரிவடிவு மோங்குபணப் பாயலுமே
தோன்று மருங்குலெனத் தோய்ந்திட்டா—யேன்றே ()

வருவா மனமாம் வடிவின் செயலே
திருமா முலையாத் திகழ்ந்தாய்—பெருமாண்பின் (ருசா0)

கைச்சங்க மொன்றே கவினுந் திருமிடறு
வச்சங்க மாக வயங்கினாய்—மெச்ச (௫௬௧)

வெடுத்தமுதற் றோற்ற மிலங்குகைக்கோ லேந்து
படைக்கண்வாள் கண்ணாப் படைத்தாய்—கடுத்துவரும் ()

யாமதங்கி வன்மழுவு மேயைம் படையில்வில்லுங்
காமர்நுத லாளுயக் காகுத்தன்—சேமமணிச் (௫௬௩)

செஞ்சிலையே நின்றன் றிருப்புருவ மாகவவன்
வெஞ்சரம்பெய் தூணி வியன்காலா—வஞ்சலெனு (௫௬௪)

வெண்ணா முனமருள்வ தெய்துந் திருவுருவா
கண்ணாநின் றாய்கண்ண னல்வேயின்—பண்ணோர் (௫௬௫)

கனியு மிசைபொன்றுங் காரிகையே நின்வா
யினிய மொழியா மிறையோன்—றனிவடிவ (௫௬௬)

மெல்லாமு மன்னா னிலங்கணையு மைம்படையு
நல்லாய்நின் னல்வடிவாய் நண்ணுதலாற்—சொல்லாரு ()

முப்பதமும் பெற்றாய்நம் முன்னோர் விலக்கினவீற்
றப்பதமொன் றெய்தநான் காமென்பர்—செப்பு (௫௬௮)

மயற்சமயத் தாரவ் வரும்பதமோ வீச
னியக்குமெய்யோ டொன்றா வியைதல்—புயற்கொத்தான்

வந்தணையு நின்னை வருந்தாதே யஃதொன்றே
யந்தமிலா லாம்பதவி யாமெனுங்காற்—சந்ததமே (௫௭0)

ரில்லானம் பட்டன் றிடுவித்தா ரோர்கணையை
யல்லா மறவ ரகம்படியா—னல்லாயர் (ருஎக)

வெண்ணெயுண்ட கள்ளன் விரிந்தகலை நூல்பார்ப்பான்
வண்ணவட மன்னியநன் மார்பினூ—னண்ணுசுவை ()

யாரா வமுதையங் கார்கொள்ளு மாகத்தன்
பேராமெண் ணாயிரத்தான் பேசுமெலாஞ்—சேராமற் ()

றுட்டுவிக்குஞ் சூத்திரன்மிக் காருஞ் சுடர்வலையன்
வேட்டஞ்சா ணுன்விரும்பு வேளென்னக்—காட்டரக்கி ()

வந்தாளை யூனஞ்செய் வள்ளன்முன்னோன் மாக்கரன்செய்
மைந்தாரு ளாட்புலைய வைத்திட்டான்—முந்தாண்மை ()

தொக்களவி லாத சுருதிகொண்ட சோமுகன்றன்
கைக்களவன் றட்டான் கருமத்தான்—மிக்கைம் (ருஎ௬)

படையாட்சி யான்வேலைப் பள்ளியெண்குச் சேனைக்
குடையா னுயிர்க்கட் குடியோ—னடையார் (ருஎஎ)

சமரி லிடையத் தகர்த்திடுவல் லம்ப
னமையு மரவினிற்கூத் தாடி—விமலமனத் (ருஎஅ)

தன்பர்க் குறவ னருமா மறைமுதலி
யின்புறுநங் கோமுட் டிகந்துளா—னன்புவியி (ருஎ௯)

---

(ருஎக) முதல் (ருஎ௯) வரையில் சிலசாதிப்பெயர்கள் ஒலித்
தலைக் குறிப்பினுலுணர்க.

லெல்லையெலாஞ் செங்கழுநீ ரோய்ந்த தடம்பணைசூழ்
தில்லை வளாகத் திருநெடுமா—லொல்லை (௫௮௦)

வருந்தே ரொலிகேட்டு வந்திருளை யோடு
முருந்தேர் நகைகை முகிழ்த்தா—டிருந்தேர்கொ (௫௮௧)

ணம்பி யழகை நயனகும்பத் தான்முகந்தாள்
பம்புகுண நான்கும் பறிகொடுத்தா—ளெம்பெருமான் ()

மெல்லத் திருத்தேரவ் வீதி கடாவுதலும்
வெல்லத் தருணமிதன் மேலுண்டோ—வில்லையென ()

மாரன் சரமனைத்து மாரியென வள்ளிவிட்டுச்
சார வடுவான் றலைதுளக்கக்—காரிகைநேர் (௫௮௪)

நின்று ளிருந்தா ணிலைதளர்ந்தாள் பாங்கிகைம்மேற்
சென்று ளெழின்மாடஞ் சேர்ந்தனள்பி—னன்றுய ()

பூவணையிற் சாய்ந்தாள் புரண்டெழா வாவியா
நோவணையா மெல்ல நுனித்துயிரா—மேவலரைச் (௫௮௬)

சுற்றத் தொடுமழித்த தூயவரோ யென்காம
முற்றப் புகலுவதோ மொய்ம்பின்வேள்—வெற்றி ()

நிவந்த சரங்க ணிலாவரங்க மானே
னவன்றனுற் சாகேத மானேன்—றவஞ்செய்யா (௫௮௮)

வித்தகைய கொங்கைமென்போ தில்லை மருவுதிருச்
சித்திரகூ டம்போற் றிகழ்கின்றேன்—மெத்தவுமை ()

வெஃகா வணைக்கிடந்தேன் வெம்பினை னீண்டிருந்தே
னஃகாவென் மெய்ப்பா டகமருவ—வெஃகாமு (௫௯௦)
ஞேயாம லேசவிந்த வூரகநின் றேனென்றேய்
வியாது கச்சிப்பேர் மெல்லணையே—னேயாக் (௫௯௧)
குருகூர்ந்து வீழ்கையேன் கூடலூர் நெஞ்சேன்
றிருநாகை யாதுதுதி செய்வேன்—பெரிதுகுலை (௫௯௨)
வண்பரி சாரத்தேன் மல்கு கடித்தானப்
பண்புடையேன் வைகுந்தம் பாங்குறைய—நண்புடையே
னெல்லாப் பதியும்யா னாகி யிருக்கவெனை
யல்லாப் பதிவே றணையாதீர்—புல்லாயா (௫௯௪)
னுத்தான சாயிமுலை யோங்குகுடந் தைவரமேல்
வைத்தாளு வேனென்னை வந்தணைவீ—ரொத்தானு (௫௯௫)
மன்புவைத் தேனை யகற்றீ ரகற்றீரொன்
றின்புவைத் தேங்கி யினைந்தினைந்து—முன்பன்றி (௫௯௬)
**வீரகோ தண்டரா மா**வெனுமென் மேற்சினக்கு
மாரகோ தண்டரா மானுவோய்—தேரொணுக் (௫௯௭)
கோளார் கொடியோயக் கோமா னிராமனெனுந்
தாளா ளனையோனான் சந்ததமுங்—கேளாக (௫௯௮)
வுள்ளி யுறையு மொருபத் தினியெனில்யான்
விள்ளுவது நின்னை விடாதென்றார்—துள்ளலைவன் (௫௯௯)

மீனுண்ணு பைதானீ வேலையிடை வீழ்கநின்
வான்மன்னு சோலைவெட்டி மாய்த்திடுக—மானக் (கூ00)

கொடிமீன் பயத்திற் குலைந்தொழிந்து போக
விடுதேர் பணிவாய் விழுக—சுடர்குடையுங் (கூ0க)

கண்பட்டுத் தேய்ந்து கழிகநின் றோடின்முரசு
மெண்பட்ட தீப்பட் டெரிந்திடுக—பண்பார்ந்த (கூ0உ)

காளமுஞ் சின்னுட் கறங்கிசைகொள் ளாதொழிக
மூளுங் கரியுதிக்கு முன்மடிக—நாளுநின் (கூ0௩)

கொற்றவில்வெட் டுண்டு குறைத்துண்டு கோதென்ன
வுற்றவர்கள் காறி யுமிழ்ந்திடுக—மற்றுளநா (கூ0௪)

ணற்றுப் பறக்கநின்று லாகாதுன் பெண்டிரா
லுற்றுப் பிழைக்க வுனவாளி—பற்றெருவிப் (கூ0௫)

பாழியஞ் சோலை பயிலக் கடவபரி
வாழி வெருகிற்கு வாய்விடுக—சூழ்வுற்ற (கூ0௬)

நின்மனைவி மாற்றானை நேர்ந்துதுய்க்க நீவளர்த்த
வன்னை முலைதோய்ந் தழிவுறுக—வின்னமுநீ (கூ0௭)

யாடற்ற கூத்தோ வனைத்து மிழிதக்க
பேடிக்கூத் தாகப் பிறங்கிடுக—நாடுபடை (கூ0௮)

யென்னைப்போ லாக வெனச்சபித்தாள் சாபவிடை
தன்னைத்தே றாய்த் தனியயர்ந்தான்—பின்னைப் (கூ0௯)

பரிவி னருகிருந்து பாங்கியர்க ளாற்ற
வரிதி னுயிர்தரித்தா ளப்பாற்—றெரிவை (சுகo)

## தெரிவை

முடிந்தமதன் மீண்டு முளைத்துவர வன்னோன்
மடிந்தவர சோங்கவந்த மாது—கடிந்த (சுகக)

துறவியரும் வெஃகவருந் தோகையெங்கு மக்கள்
பிறவியிலே யெய்தவொணாப் பேறு—தறையிற் (சுகஉ)

றனக்குநிக ரில்லாத தையலெதிர் கண்டார்
மனக்கினிய தான மடமான்—சினத்துருக்கு (சுகங)

மேகமோ மைக்கா விருளோ விடரடைந்த
மோகமோ வென்றோது மொய்குழலாள்—வேக (சுகச)

விடமோ பிணையோ விசிகமோ மோதுங்
கடலோ வெனவுரைக்குங் கண்ணாள்—சுடர்காலும் (சுகரு)

பத்தி முருந்தோ படர்முல்லை மென்முகையோ
முத்தமோ வென்னு முறுவலா—ளத்தர்செங்கை (சுகசா)

மேருவோ வில்வேள் வியன்முடியோ செய்யசர
சீருகப்பைம் போதுகொலோ செப்பினமோ—நீருட் ()

குமிழியோ கும்பமோ கோங்கரும்போ வாசச்
சிமிழ்தானோ நேமியோ செய்ய—தமிழின் (சுகஎ)

சுவையோ விளநீரோ தூயபொற் குன்றோ
குவவார் மதயானைக் கோடோ—கவறேறி (சுகஅ)

யாடாத வட்டோ வலங்கன் மதவேளின்
கூடார மோவென்னுங் கொங்கையாள்—சேடார் (௬௨௦)

மறுவில் சிறப்பின் வளர்மே னிலையி
னறுமலர்ப்பூஞ் சேக்கை நயந்து—நிறைதென்றல் (௬௨௧)

புல்லு நறையேந்திப் புக்கிறைத்து நீண்டியெங்கு
மெல்லெனத்தை வந்துசலுழிந்தசைப்ப—வல்லினிடைக்

கண்படை கொண்டு கனவி னருகியே
விண்படு மெய்யோன் விசிவ்ருங்காற்—பண்படையத் ()

தோழியோ தோழியோ தோய்வாயிற் பூங்கதவந்
தாழிடாய் போதுகெனத் தாழிட்டாங்—கூழி (௬௨௪)

னழைத்ததென்னென் றுளை யருகிருத்திக் கேளா [கைச்
யிழைத்தசெயல் யாதென் றிசைப்பேன் — குழைத்தவிற்

செம்ம லிராகவனூர் தெய்வ வடிவையுன்னி
யம்மலர்மென் சேக்கையதில் யானுறங்கத்—தெம்மடங்கற்

காகுத்த னூர்தாங் கடியேன்பா லெய்தலுஞ்சை
யோகத் தனியின்ப முற்றதென—மோகத்தாற் (௬௨௭)

றன்னையறி யாது தருக்கியெதிர் சென்றிறைஞ்ச
மின்னை யணைக்குமொரு மேகம்போ—லென்னை (௬௨௮)

யெடுத்துத் திருமார்பி லிட்டெனது கொங்கை
மடுப்ப வணைத்து மகிழ்ந்தே—யடுத்தவொரு (௬௨௯)

பொற்பலகை மீது புனைபளிக்கு நாய்பரப்பி
யற்பிற் கவற்று லயர்துமென்றார்—விற்பனரோ (௬௱0)

தோற்றார்க்கோர்தோற்றரவுஞ்சூழ்கவற்றில்வென்றோர்க்கு
மேற்றோய் சிறப்புமென்ன விள்ளுகென்றே—னுற்றுமற் ()

றோற்றார்கள் வென்றவர்தாஞ் சொன்னபடி செய்வதென
வேற்றுங் கியாங்க ளியைந்தாடுங்—காற்றுமே (௬௱௨)

மெல்லமெல்லத்தோல்வியுற்றுவெள்கவுடன்கைப்பிடித்துச்
சொல்லிய வாறு துணிதிரொன்றே—னல்லதுகா (௬௱௩)

ணவ்வண்ணஞ் செய்வே னகத்தில்விருப் பென்னென்றார்
மைவண்ண மேனியீர் வைகலுநா—னெவ்வணமு (௬௱௪)

மும்மைப் பிரியா துறையவிருப் பீரொன்றேன்
கொம்மைமுலை யாயென்னைக் கொள்கென்று—தம்மையே

முக்காலுந் தொட்டு மொழிந்துபே ராணையிட்டே
யக்காலை யென்கை யகம்பற்றிப்—புக்காங்கோர் (௬௱௬)

பாயலில் வைகிப் பவளவாய் முத்தமுண்டு
தூய கலவி தொடங்கியே—மேயங்கண் (௬௱௭)

மெய்யொன்றி யாவியொன்றாய் வேட்கையொன்று யுற்ற
கையொன்றி யெங்கள் கருத்தொன்றிப்—பைய [ணைக்குங்

வுதயனனென் பான்பண் டுயர்மகதம் புக்குப்
பதுமை யொடுகலந்த பண்பே—யிதுவென்ன (௬௱௯)

மற்றின்ப மெல்லாம் வறிதேயீ தொன்றன்றே
முற்றின்ப மென்றென்பான் மோகரமா—யுற்றுத் (௯௪௦)

திகழக் கலக்கின்ற செவ்வி வயிற்றை
யகழக் கலக்குகின்ற வாறே—மகிழ்கோழி (௯௪௧)

குக்கூவென் றேயாமற் கூவ வதுபோழ்தி
லக்கீழ்த் திசையிரவி யண்முதலு—மிக்கார் (௯௪௨)

நனவென் றுட் கொண்டு நயந்து விழித்தேன்
கனவென் றறியேன் கடியே—னினைவுவரச் (௯௪௩)

செய்த விழிக்கியான் றீங்கிழைத்த தென்கொலோ
நொய்தின் விழித்த நுனிபாம—லைதவளைக் (௯௪௪)

கூடுநெறி தேராக் கொடியே னிருந்தென்னு
நீடு கனுமயக்க நேர்ந்துன்னைக்—கேடில் (௯௪௫)

கதவத்தைத் தாழிடென்றேன் காமத் தினுக்கன்
புதவுந் தனிமடல்யா னூர்வேன்—முதுநீர்க் (௯௪௬)

கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்றல்—கொடிதன்றே (௯௪௭)

வெண்மடங்கு காமமெய்க் கேய்வித்த தீவிதியார்
கண்மையிலார் வேறுநெறி காட்டிலார்—பெண்மயிலே ()

யாதலினுன் மாற னகநெறியே கொள்கிற்பேன்
போது மணிமா புனைகிழிநற்—பூதிமுத (௯௪௯)

லாயு மடலூர்தற் காவனகொண் டெய்துகெனத்
தேயு மிடையுடையா டேமொழியுன்—றூய (௩௫௦)

வடிவழகைக் கண்டந்த வள்ளன்மட லூரும்
படியிருக்க நீயூர்தல் பண்போ—விடியலிலே (௩௫௧)

கண்ட கனவெவர்க்குங் காணக் கிடைக்குமோ
கொண்டனிறத் தானையின்றே கூட்டுவிக்கு—மண்டர்பிரா

னின்னே வருகுவனீ யேங்காதே யென்னுங்காற்
றன்னேரில் கம்பனூர் சார்ந்தவைக்கண்—முன்றேது ()

தொல்காப் பியத்தனண்டர் சூளா மணியனையான்
பல்காப் பியங்கு படையிறு—ஞெல்காச்சி (௩௫௪)

ராற்றுப் படையான்மற் றந்தா தியருளவன்
போற்றன் பரணியான் போரினுலா—வாற்றலான் (௩௫௫)

மார்பினிடை நன்னூலன் வண்சொலதி காரிகருச் [ட
சார்பி னெழுத்துயிர்க்குத் தானமைப்போ—னேர்கொண்

தீங்கார் சயந்தச் சிறுகாக்கை பாடினிய
பாங்கா யருளும் பரந்தாம—ஞெங்குளத்திற் (௩௫௭)

கண்டோ ரகப்பொருளாய்க் காணுங்கோ வைப்பாவான்
விண்டோர் புறப்பொருளாய் மேவுவான்—கொண்ட ()

---

(௩௫௪) முதல் (௩௬௬) வரையில் சிலநூற்பெயரும் உரையாசிரியர்கள் பெயரும் ஒலித்தலைக் குறிப்பினுலுணர்க.

கவின்யாப் பருங்கலக் காரிகைவாழ் மார்பன்
சவிகொளலங் காரத் தமியன்—புவியின்மிசை (கூ௫கூ)

யெல்லா விலக்கணமு மேய்ந்த பெருங்கதையா
னல்லாத செய்த வகவிகையாங்—கல்லாடன் (கூகூ0)

கோடியசா பந்தீர்த்தான் கொற்றப்பே ராசிரிய
நாடி யுளநச்சி னார்க்கினியன்—பீடா (கூகூக)

ரிளம்பூ ரணமதிபோ லேய்முகத்தாள் கேள்வன்
விளம்பவெஞ்சே னவரையா மென்சொல்-வளந்தருவோன்

பம்பு குரக்குப் பரிமே லழகன்று
ணம்பு மடியார்க்கு நல்லான்கார்ப்—பைம்புயல்கள்(கூகூ௨)

வண்பொழில்சூழ் தில்லை வளாகப்பி ரான்மணித்தேர்
தண்பெரிய வீதி தலைப்படலு—நண்பி (கூகூச)

னருகோடி வந்தொருத்தி யஃதுசொலச் செல்வ
மொருகோடி பெற்றுங் குவந்து—பொருவாள் (கூகூ௫)

பரிந்த கனவு பலித்ததென வச்சொற்
புரிந்துமெய் யொப்பப் புனைந்து—விரிந்தமல (கூகூகூ)

ரந்தணன்செ யோவியமோ வாயிழையோ வானுலகின்
சுந்தரியோ வேறு சுரமகளோ—விந்தைகொலோ (கூகூஎ)

விண்ணுலகின் மாதரொனின் மென்மலர்கள் வாடாபூங் [ல்
கண்ணிமையாஞாலமிசைக்கால்பொருந்தா—வண்ணமெய்யி

வேரா திவைகளிந்த மெல்லியலார்க் கில்லையாற்
பாரா ரிவரோ பயிற்சியினுல்—யாரோ (கூகூகூ)
வெனக்குமரர் தாமயங்க வின்சொற்கொப் பாக
வினக்கிளியொன்றெண்கரத்திலேந்தி—யனப்பெடைபோன்

மெல்ல வசைந்தசைந்து மேகலையும் பாதமலர்
புல்லி மிளிர்நூ புரங்களுமிம்—மெல்லிடைதா (கூஎக)
ளின்றே யிறுமென் றிரங்கி யழுதேங்க
மின்றேர்க லாதுபுவி மேயதுபோன்—மென்றேட்டுப் ()

பாதஞ் செவக்கப் பரிமளங்கள் பூசியது
காதஞ் செறிந்து கமழுமலர்—மோதுங்கார் (கூஎங)
வண்டரற்றச் சென்று வனசையன தோழியர்கள்
கொண்டவிரு பாற்கை குவித்திறைஞ்ச—வண்டர்பிரான் ()

பாத கமலம் பணிந்தாள் பரிந்துபற்று
பாத கமலம் பரிகவென்றே—யோதுமுன (கூஎரு)
மாரன் முனிந்து வளைப்பத் தயரதகு
மாரன் முனிந்து வதனியுடல்—சோரக் (கூஎகூ)

கடைக்கணியான் போற்றேர் கடாவியப்பாற் செல்லப்
படைக்கணியா ளாவி பதைத்துத்—துடித்துத் (கூஎஎ)
தளர்ந்துதிருத் தேர்மேற் றனிச்செல்வி ரீங்கு
விளைந்ததனை நோக்குவீர் வில்வேள்—வளைந்தொறுப்ப ()

வெம்பினை ணுந்தேன் வியர்த்தே னயர்த்துநும்மை
நம்பினை னீத்து நடவாதீ—ரும்பர்கோன் (௬௭௯)

போந்துசர ணென்னப் பொரும லொழித்தருள்செய்
வேந்தன் றவத்துதித்த வித்தகரோ—யேந்தியசீர்த் (௬௮௦)

தந்தை யியனீர் தழுவா திருக்கின்ற
இந்தக் கலியி னியல்போதான்—சந்ததமு (௬௮௧)

நின்னையக லேனென்று நேராகப் பற்பலசூ
ளென்னவிர வெண்பா னிகழ்த்தினீர்—பின்னை (௬௮௨)

விலக்கிவிட்டுத் தேரேறி வீதிசெல்வீ ரென்னைக்
கலக்குமட்டுந் தானோ கடுஞ்சூள்—புலைக்கடிமை (௬௮௩)

யுற்றும்பொய் சொல்லா லுயர்குலத்தீர் நும்வார்த்தை
முற்றும்பொய் யாகியதென் முன்வினையே-பொற்றைமுலை

நல்லார்மு னென்னை நழுவக்கை விட்டுவிட்ட
சொல்லாரு மேச விருக்கின்றேன்—வில்லாண்மை (௬௮௫)

வீரருக்கு முன்னிருக்கும் வித்தகரோ காத்திடுமென்
றூர மணைபுகுந்தா ளாங்கொருத்தி—பேரிளம்பெ (௬௮௬)

## பேரிளம்பெண்

ணென்னு மொருமா திரதி யொடுவேனின்
மன்னன் றெழுத்தக்க மாதெய்வ—முன்னவன்ற (௬௮௭)

னெற்றிவிழித் தீயை நிலையடக்கு நீர்மையெல்லாங்
கற்ற கலைமா கடற்பெருக்கங்—கொற்றமதன் (௬௮௮)

வேதாந்தத் துச்சி விளங்குவாள் யாவருந்தன்
பாதாம் புயர்த்தொழுமோர் பான்மையாண்—மீதோங்கு ()
திங்க ணிகர்முகத்துச் செம்மலடிப் பீடமிசைப்
பொங்குதிருச் சுண்ணம் பொலிநுதலாள்—சங்கரனுக் ()
கால மளித்தொழிந்த வம்போதி யாமெனமைக்
கோலமெழு தாதொழித்த கூர்ங்கண்ணாள்—சாலவெழின் ()
மின்குலவு வண்டேறு மென்சண் பகமுகிழ்போ
னன்கலங்கள் பூணாத நாசியா—ளின்கருணைக் (௬௯௨)
கத்த ரிருவர் கலந்தா லனநீல
முத்தொடுசேர்ந் தன்ன முறுவலா—ளத்தனைத்தான் ()
பூசித்துப் பந்தப் புணர்ப்பொழித்த பான்மையென
வூசற் பணிதீர்ந் தொளிர் செவியாள்—வீசலைவாய்க் (௬௯௪)
கூர்மவுரு வேந்தியடை கூடாமுன் கால்சாய்ந்த
நீர்மலியும் வெற்பி னிலையென்ன—வோர்தத்தை (௬௯௫)
வத்தவனன் றூர்ந்து வருபத்தி ராபதிப்பே
ரொத்த பிடிசாய்ந் துயிர்த்ததென—மெத்துவலிக் (௬௯௬)
காலின்மக னுந்தக் கருத்திற் கலக்கமுற்று
வேலையிடை மைந்நாகம் வீழ்ந்ததென—ஞாலமிசைத் ()

---

(௬௯௫) தத்தை=வாசவதத்தை. (௬௯௬) வத்தவன்=உதயனன். இக்கதையையே திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் (௬௬, ௬௭, ௬௮) கண்ணிகளில் அருளிச்செய்திருப்பது காண்க.

தன்மெய் யடியா ரிருவரொதிர் சந்தித்தான்
முன்மெய் வணங்கு முறையென்ன—நன்மகிழ்வா (சாகூஅ)

லாவிலைமேல் யோகத் தறிதுயில்கண் டும்பரிரு
பாலிறைஞ்சி நின்ற படியென்னச்—சால (சாகூகூ)

மெலியாரைத் துன்புறுப்பார் வெய்துயிர்த்துத் தங்கள்
வலியோய்ந் தடங்கலென மாழ்கி—நலிவேற்றி (எ00)

மென்மருங்குற் கல்லல் விளைத்தபழி மேவித்தம்
வன்மைகெடச் சாய்ந்த வனமுலையாள்—சந்நிதியி (எ0க)

லஞ்சலித்த லொன்றே யமையுங் கரமென்னுங்
கஞ்ச மலர்க்குக் கவினென்பா—ளஞ்சலில்சீர்க் (எ0உ)

கோயில்வலஞ் சூழ வருகின்ற கொள்கையே
யாய வடிகட் கணியென்பா—டீய (எ0ங)

புறத்தொட்டி வாவி புகுந்தாட லொன்றே
திறைத்திட்ட மஞ்சனநீ ரென்பாள்—பொறுத்த (எ0ச)

பருவமதற் கேற்பமதப் பாலகனை விட்டுத்
தருதந்தை யைவிரும்பிச் சார்வாண்—மருவுசிறை (எ0ரு)

வண்டறைபூத் தந்தார்பான் மல்கிளு ளின்றுவனைத்
தண்டழைக்கே யுள்ளந் தழைகுவாள்—கொண்டயாழ் ()

மென்சுவைகொண் டாண்மிருதி வேதியர்சொ லர்ச்சனையி
னின்சுவைக்கே யுள்ளத்தை யீட்டுவோ—னன்சுவைகொ()

ளின்னடிசி லேகொண்டா ளேய்துளவோ டொண்டீர்த்தஞ்
சந்நிதியி லேற்கமனந் தான்மகிழ்வாள்—பொன்னொளிரு()

மல்லாண்ட திண்டோண் மணிவண் ணனைப்போற்றிப்
பல்லாண்டு கூறிப் பரவுவா—னல்லாண்டான் (எ0கூ)

சீதக் கடலாதி தெய்வமொழி சிந்தித்து
மோதக் கடலின் முழுகுவா—ளாதரவாய் (எக0)

மன்னு புகழ்முதலா வாய்ந்தனவன் றாளிணைகள்
துன்னுவசிந் தித்தன்பு சூழ்குவாள்—பன்னியசீ (எகக)

ரங்க ணெடுமதிளே யாதியா வுள்ளவெலா
நங்கை நினைந்துமகிழ் நண்ணுவா—ளிங்கணற்றை (எகஉ)

வைக லெழுந்து மலர்ப்பொய்கை புக்காடி
மெய்கவின்செய் பட்டிடையில்வீக்கியே-மொய்சுடர்மெய்க்

காவன வெல்லா வலங்கார மும்புனைந்து
பாவையர் சூழப் பயிறவிசின்—மேவி (எகச)

யிருந்துழியோர் பெண்போந் திணையடிக ளேத்திப்
பொருந்து தமிழ்தேர் புலமைத்—திருந்தறிவின் (எகரு)

மிக்கார் மறைதோய் வியன்குலத்தோர் நாமிறைஞ்சத்
தக்கார் தகாரிடத்திற் சாராதார்—புக்கார்கா (எகசு)

ணின்றா ரிருவர்கணந் நீள்கடைக்கே யென்னவுடன்
சென்றாங் கழையென்னச் சென்றழைப்ப—நன்றெனவே()

---

(எ0கூ) முதல் (எகஉ) வரையில் முதலாயிரத்திலுள்ள சில பாசுரங்களின் முதனினைப்பு.

மெய்யிலங்கு மண்காப்பு மென்றுளவப் பூவடங்கள்
கையிலங்கு வண்ணமுமாக் காரிகைபா—லெய்திடநேர் ()

கண்டெதிர் சென்று கழல்போற்றிப் பூந்தவிசிற்
கொண்டிருத்திச் செங்கை குவித்தெதிரோர்-தண்டவிசின்

மெல்ல விருந்திரகு வீரனு ரோற்றமெலாஞ்
சொல்லுமென வோர்மறையோன் றோகாயவ்—வில்லி ()

யொருவனுமே மூவ ருருவதற்குச் சான்று
பெருக வுளவவற்றைப் பேசின்—மருவுகதை (௭௨௧)

யுண்மூ லமூநடுவு மில்லதென வோதுகவிக்
கண்மூ யிலங்கு கருத்தறிவாய்—நண்ணி (௭௨௨)

யரனதிக னென்பதனு லம்மூ வருமோர்
தரமுடையா ரென்பதுவே சாலும்—பரவு (௭௨௩)

விசயனன்று பூசித்து வெள்ளிமலை நம்ப
னிசையுமெய்யிற் கண்ட தெவன்கா—ணிசைமே (௭௨௪)

வரனு ரணனும மான்விடைபுள் ளூர்தி
பரமேற்றான் புள்ளூர்ந்தான் பண்பாற்—பெருக (௭௨௫)

---

(௭௨௨) ‘மூலமூநடுவும்’ கம்பராமாயணம், சுந்தரகாண்டம், பிணிவீட்டுபடலம், செய்யுள்-௮௦.

(௭௨௩) ‘அரனதிகன்’ க-ம், கிஷ்-ம், நாடவிட்டபடலம், செய்-௨௪.

(௭௨௫) ‘அரனாரணனும்’ ‘ஏற்றான்புள்ளூர்ந்தான்’ இயற்பா, மூதற்றிருவந்தாதி, ௫, ௭௪.

வுணர்ந்துணர்ந்தொன் றின்ன வுரைபோங் கவிக
ளுணர்ந்துழியென் னுள்ளுறைவந் தாறு—முணர (௭௨௬)

வலத்தன னென்பதற் கேற்பவய வேந்தன்
சொலப்புகுந்த வந்தாதி தோய்ந்துண்—ணிலைத்த (௭௨௭)

விடமால் வலந்தா னெனுங்கவிபோ தாதோ
திடமே துணியவெனச் செம்மை—யுடையோன் (௭௨௮)

மொழிவதனைக் கேட்டுமற்றை மூதறிஞ னோக்கிக்
கழிய நகைத்திதுவோ கற்றாய்—மொழியுமிது (௭௨௯)

பூருவ பக்கம் புகலு முறுதியான்
சார வுரைப்பன் றகும்யாரு—மோரா (௭௩0)

விவனே தலைவன்மற்றை யேய்ந்த விருவ
ரவரோ விவற்கங்க மாவார்—றுவல்பிரமன் (௭௩௧)

பண்டிவன்ற னுட்புகுந்து பார்த்துப் புறம்வாரா
துண்ட வயிற்றி லுழன்றதுவும்—விண்டுந்தி (௭௩௨)

பூத்த மலர்வழியே போந்ததுவுங் கேட்டிலையோ
வாய்த்த வரணியற்கை மாற்றுவதென்—பேர்த்துத்(௭௩௩)

---

(௭௨௬) 'உணர்ந்துணர்ந்து' 'ஒன்றென' திருவாய்மொழி,
முதற்பத்து மூன்றாந்திருவாய்மொழி, ௬, ௭.

(௭௨௭) 'வலத்தனன்' ஷை ஷை ஷை ௯.

(௭௨௭) வேந்தன் அந்தாதி=சேரமான்பெருமாள் நாயனார் அரு
ளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி.

தொடர்ந்த பதுமா சுரற்கஞ்சி யோட
வடர்ந்தவனைச் செற்ற தமையுங்—கடிந்துளத்துப் (எநச)

பண்டுகெண்டா கன்னன் பரிந்துபரிந் துள்ளுமெலாம்
விண்டிவனுற் பெற்ற விதஞ்சாலுந்—திண்டிறற்றோள் ()

வாணன் செருவகத்து வந்தெதிர்ந்த செய்தியெல்லா
நாணமறப் பேசி னகையாகும்—பேணுமிய (எநரு)

லெச்சமயத் தோர்க்கு மிறையவனம் மாலென்ப
தச்சமய மெல்லா மறியுங்காண்—மெச்சுகரி (எநஎ)

காலை நறுமலர்க ளொன்ற வெனுங்கவியே
சால வமையாதோ சாற்றுவதென்—சூலமுகில் (எநஅ)

விண்பொழியு நீரொங்கு வீழ்ந்தாலும் வேலைபுகும்
பண்பெனவெத் தேவைப் பரவிடினு—நண்பினவை ()

மாயவனைச் சேரும் வழக்காற் பிறதெய்வ
மாயவைக ளேற்றளிக்க வாற்றுவா—னேயமுட (எசo)

னெத்தெய்வ மாகவெண்ணி யெங்கு வழிபடினு
மத்தெய்வ மாகியிவ னங்குறுவான்—கத்தன் (எசக)

மலைமகட்குச் சொற்றதெவர் மந்திரத்தை வேட
னிலைபெற்ற தார்பேர் நிகழ்த்தி—யலைபுனலின் (எசஉ)

மூலமே யென்றகைம்மா முன்வந்து நின்றவரார்
ஞாலமெலாங் காத்தளிக்கு நாயகரார்—மேலைச் (எசந)

---

(எநஅ) 'காலையினறுமலர்' க-ம், உயு-ம், இரணியவதைப்படலம்,எஎ.

சுருதி களிற்புருட சூத்தமொன்றே சாலுங்
கருதுகெனக் கேட்டுக் களித்துத்—திருமறையோர்க் ()
கன்பிற் கொடுப்ப வளித்தவனைப் போக்கிநம்பி
யின்பருள்பே ரோத்தி யிருக்குங்காற்—றன்பா (எசரு)
லவிரும் பிரபவன்மற் றுயாது நெஞ்சங்
குவிபவர்த முள்ளத்திற் கூடான்—புவிமீது (எசசு)
தொக்க மறையோர் தொடர்வேள்விக் கியுமவி
சுக்கிலக்க ணுன்மெய் தோயுநிற—மிக்குயர்விண் (எசஎ)
ணப்பிரமோ தூதைமக வாண்டபிரான் கம்பரன்பிற்
செப்பிரசோற் பத்திச் செழுங்கதையா—ளுப்பின்மதிக்()
காங்கீ ரசன்றென்ற லங்கால் விசிறிமுகப்
பாங்குறவே லக்கணாயிற் பள்ளிகொண்டா—ளேங்குகலை()
யாய்பவன்மெய் நல்லயுவா வந்தா துகுதுளவன்
றுய்புகலாற் றீயீ சுரன்சார்ந்தான்—மேய (எருo)
வெகுதா னியம்பொருள்கள் வேண்டுமெட்டும் வேள்வி
தொகுபூ சுரர்க்கீந்த தூயோன்—மிகுசீர்ப் (எருக)
பிரமா தியரிற் பெருவிக் கிரமன்
விரவு விசுவன் விமலன்—பரவுசித்ர (எருஉ)

---

(எசசு) முதல் (எஎக) வரையில் முறையே அறுபதுவருஷப் பெயர்கள் ஒலிப்பதைக் குறிப்பினுலுணர்க.

பானு வனையான்சு பானுவழி வந்தோனன்
பானுவலுத் தாரணன்முன் பார்த்திபங்காத்—தேனே ()

வியன்சருவ சித்தானுன் விஞ்சருவ தாரிவ்
வியலறிவா னென்றவன்சொ லேற்றான்—புயல்போ ()

லவிரோதி மார்ப னடவி குருதி
துவரக் கரனைத் தொலைத்தோன்—புவியி (எருரு)

னசையார் தவமுடையார் நந்தனமென் பானல்
விசையன் சயவீரன் மேலா—மிசைகொளிரா (எருசு)

மன்மதனை யீன்றான் வயங்குபடை வீரரொடு
துன்முகனென் பானைத் தொலைத்திட்டோன்—பன்முகமு

மெய்யே விளம்பி மிகுசொல் விளம்பியுணும்
பொய்யார் விராதனைமுன் போக்கினேன்—றுய்ய (எருஅ)

வவிகாரி சாருவரி யஞ்சொப் பிலவன்
கவிலுஞ் சுபகிருது நாடிப்—புவிமீது (எருகூ)

பண்டிழைத்தோ னச்சோ பகிருதுநீ ரால்கலிபொன்
றண்டர்க் கமுதூட்ட வன்றுவந்தோன்—கொண்டபேய் ()

மிக்குரோ தித்துயிர்தான் வீடமுலைப் பாலுண்டோன்
றக்கதவத் தால்வா சவனுட்டைக்—கைக்கொடவன் (எசுக)

மாதவிசு வாவசுரர் வானுளுக் கோர்கூற்றாய்ப்
போதருமுத் துங்கன் புகழ்தோய்ந்தோ—னேதமற (எசுஉ)

முற்றும்ப ராபவர்க்கு முன்னிற்போ னெண்கிளேறு
துற்ற பிலவங்கஞ் சூழ்படையான்—பெற்றங் (௭௬௩)

கிலக விருக்கு மிருஞ்சௌ மியன்மேற்
குலவெஞ்சா தாரணன்சொற் கொண்டோ—னலகின்றி ( )

வெய்ய விரோதி கிருதுவெகுண் டான்குரக்குச்
செய்யபரி தாவிச் செலமேற்கொ—ளையன் (௭௬௫)

பிரமாதீ சர்க்குமேற் பெற்றியா னுள்ளம்
பரமானந் தஞ்செய் பரமன்—விரவு (௭௬௬)

களவா ரிராக்கதரைக் காய்வானவ் வேலை
நளனு லணைகண்டு நண்ணிக்—கிளர்வாக (௭௬௭)

வொப்பிங் கிலாத வொருகால யுத்தத்தி
லெய்ப்பறவஞ் சித்தார்த் திகல்கொண்டு—வெப்பமிகு ( )

தீய ரிரவுத் திரிதுன் மதியாரைத்
தூயவிண்ணோர் தந்துந் துபியார்ப்ப—மேயி (௭௬௯)

ருருத்திரோ காரின்மெய் யொல்லீவொன் றன்னூர்
செருத்தவிரத் தாக்கிச் சிதைத்துப்—பரித்து (௭௭௦)

மிகுரோ தனம்புரிய வென்ற பெருமா
னகுமட் சயதூணி நம்பி—தொகுசுடர்செய் (௭௭௧)

பைம்பொற்றேர் மீதிரண்டு பாலும்பல் வாச்சியத்தோ
டம்பொற் றிருச்சின்ன மார்ப்பவே—பம்புதெருப் (௭௭௨)

போதருகை நோக்கியொரு பூவைவந்து போற்றிசெய்து
நாதன் வருகை நவிற்றக்கேட்—டாதரவாற் (எஎரு)

கண்ணிய நம்பிதிருக் காட்சிதரி சித்துமென
வெண்ணி யெவருமடி யீடேத்த—நண்ணியெதிர் (எஎச)

கும்பிட்டாண் முன்னே குறிப்பிட்ட வேள்வாரி
யம்பிட்ட சூழ்விற் ககப்பட்டாள்—வெம்புற்று (எஎரு)

நின்றாளை நோக்கா நிலைதளர்ந்தும் பேரறிவா
னன்று தரத்தோடு நாடாமற்—றென்றுவுற் (எஎசு)

றேயாது காமத்தீ யுள்ளெழுந்து பொங்கிவர
வாயா வுயிர்ப்போங் ககமெலிந்து—தூயோரே (எஎஎ)

பூஞ்சிலைகைக் கொண்டீர் பொருவில்பல பத்திரனு
நாஞ்சிலைக்கை யேந்திய நாதரோ—பூஞ்சரண்புக் (எஎஅ)

கஞ்சியரு ளென்ற வரக்கனைமாற் றுனென்று
நெஞ்சில் கருணை யினிதளித்தீர்—செஞ்சிலைக்கை (எஎகூ)

வீரமதற் கஞ்சிநும்மை மேவுவேற் கக்கருணை
சார வளித்த றகாதோதா—னோர்செய்முழங் (எஅ0)

தாளின்கீழ்க் கண்டைட் தழங்கோசை கேட்டுமந்தி
வேளையா வின்மணிக்கு வெம்புவதோ—நீள்சுடர்செய் ()

துங்கதேனை வீதியிலே நோக்கியும்வே ளுய்யவரு
வெங்தேனை யஞ்சி வெதும்புவதோ—வந்தோரீ (எஅஉ)

ரிங்கண் வருமுரசத் தின்னொலியைக் கேட்டுமதன்
வெங்கண் முரசால் விளிவதோ—நுங்கைப் (எஅங)

பிறையம்பு கொண்டு பிறங்கயான் காம
னறையம்பிற் கஞ்ச னலனோ—முறைசெ (எஅச)

யெழுத்துச் சரமிருந்து மேதின் மதனார்
முழுத்துச்ச ரம்மா முனிவில்—விழுத்திடலென் (எஅரு)

வைதேகி யோடு வரும்பவனி யெம்மையயல்
வைதேச வென்றோ வகுத்திடீர்—நொய்தவள்போன் ()

மானைத்தா வென்றும்மை வாளா வலைத்தேனோ
கானைத்தா மேயலையக் கண்டேனோ—வானவனை (எஅஎ)

மெய்வருந்தி மீட்டீபொன் மேனோக்கின் வேண்முரச
மொய்கடலும் போரு முடியுமே—வெய்துயிர்த்த (எஅஅ)

காட்டானை காத்தீர் கராமதனைச் செற்றென்முலைக்
கோட்டானை கைக்கோடல் கூடாதோ—மாட்டாத (எஅகூ)

காகத்தின் கண்கவர்ந்த கையே வெனும்புல்லிவ்
வேகக் குயிலருகு மேவாதோ—மாழ்குற்று (எகூ0)

மேகா மதன்றேரை யேய்படுக்கை யானபாம்
பாகார மாக்க வமையாதோ—மாகாதற் (எகூக)

பூசைக்கு வெண்ணெய் புரிந்தளிப்பீ ரன்னதைவேள்
வாசிக்கு முன்விட்டால் வாழ்வுண்டே—நேசியாக் (எகூஉ)

கஞ்சனைக் கொன்ற கடவுளே வெங்காம
வஞ்சனைக் கொன்று வழிவிட—வொஞ்சலிலா (௭௯௩)

வண்டரோ யாதி யனைவோரும் போற்றுமருட்
கொண்டலே யென்றுமுனங் கூறுதலோ-டெண்டிசையும்

விண்ணு டியர்நாக மென்னு டியர்கடல்சூழ்
மண்ணு டியர்முதலா மால்பெருக—வெண்மேவு (௭௯௫)

தேனாநிலை யிட்டன்பு செய்வார்க்கு வாழ்வுதவி
யூனா நிலையிட் டுளமகிழ்வான்—பார்புகழு (௭௯௬)

முத்துங்க தீர னுலகமெலாங் காத்தளிப்போன்
மைத்துங்க மேகநிகர் வண்மையான்—மெத்நியசீ (௭௯௭)

ரண்ணல் பெருமா னருளாளன் பங்கயச்செங்
கண்ணன் கருணைக் கடலனையான்—விண்ணவர்கோ (௭௯௮)

னல்வீர கோதண்ட ராமனென நாயகனென்
சொல்வே யுலாத்தொடையல் சூடினேன்—வில்விளங்கு()

மாகரத்தான் றில்லை வளாகநெடு வீதிதொறு
மோகைபெறப் போந்தா னுலா. (௮௦௦)

தில்லைவளாகம்

## ஸ்ரீ வீரகோதண்டராமஸ்வாமி உலா

முற்றிற்று.